செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு ரு

பரல் - கக

நவம்பர் 1927
டிசம்பர்

JL.
031ஈ 211,N22
N27.5.11
166173

Reg. No. M. 1725. [illegible] பால் கக

# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு


| | |
|---|---|
| [illegible]த்தப்பெம்மான் படம் | |
| கடவுள் நிலைக்கு மாறான [illegible]கள் சைவம் ஆகா. | கூசங |
| இரண்டன்மை | [illegible] |
| தமிழ்நாட்டுச் சைவ இளை[illegible] கடமை | [illegible] |
| உலகநீதி மொழி பெயர்ப்பு | கூ௯௲ |
| புறநானூற்றின் ஆராய்ச்சி | கூ௯௬ |
| மார்கழித் திருவாதிரை விளக்கம் | கூஅ |
| காழிக் கண்ணுடைய வள்ளலார் | களஉ |
| [illegible]மிழர் முன்னேற்றம் | கூஎ௯ |
| [illegible]பா ஆராய்ச்சி | கூஅரு |
| [illegible] தமிழகராதி | கூஅக |
| [illegible]ய வகுப்பு வரலாறு | கூகூஉ |
| இருபெண்மணிகளின் உரையாடல் | கூகூ௯ |
| மெய்யறிவு | ககக |
| தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல், | எா |
| மதிப்புரை | எாக |


The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
[illegible] கையொப்பம் ரூ. 4   பிரபவ - கார்த்திகை   தனிப்படி அ௵

## 'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

**(Editorial Board Members)**

தலைவர்

1. திருவாளர். கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.
*அட்வகேட், முறைமன்றப் பேராசிரியர், சென்னை.*

---

2. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர் பிஷப் ஹீபர் கலாசாலை, திருச்சிராப்பள்ளி.*
3. ,, துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
*போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஊரூர்.*
4. ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.,
*பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.*
5. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
*மகிபாலன்பட்டி.*
6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
*வழக்கறிஞர், சாத்தூர்.*
7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*
8. ,, பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்.
*தலைமைத் தமிழாசிரியர், செயின்று ஜான் கல்லூரி, திருநெல்வேலி.*
9. ,, T. S. பாலசுந்தரம்பிள்ளையவர்கள்.
*சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தமிழ்ப்புலவர், சென்னை.*

---

## கையொப்ப விவரம்

| | ரூ. | அ |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய உள்நாடுகளுக்கு ஆண்டுக் கையொப்பம் | 4 | 0 |
| கழகப் பங்காளிகளுக்கும், மாணவர்களுக்கும் ,, | 3 | 8 |
| வெளிநாடுகளுக்கு ,, | 4 | 8 |

**64-பக்கமுடைய மாதிரிப் பிரதி விலை 4 அணா**

---

## விளம்பரக் கூலி

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | ரூ | 8 | 0 |
| அரைப் பக்கத்திற்கு | ரூ | 5 | 0 |

குறிப்பு:—பினாங், சிங்கப்பூர் தவிர பிற வெளிநாடுகளி லுள்ளவர்கள் முன்பண மனுப்பியே பத்திரிகையினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,**
6, பவழக்காரத் தெரு சென்னை.

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள் தோறும் வெளிவருவது

| | | |
|---|---|---|
| சிலம்பு ௫ | மெய்கண்டார் யாண்டு-௭௫ கார்த்திகைத் திங்கள்<br>1927 ஆம் நவம்பர்—டிசம்பர் | பரல் ௧௧ |

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

---

## கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா

[சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள்]

(௩௮௮-ம் பக்கத் தொடர்ச்சி)

இனிக் 'கேடொன்றில்லான்' என்னுஞ் சொற்றொடர், 'இறைவன் எக்காலத்தும் எத்தகைய அழிவும் எத்தகைய ஊறுபாடும் இல்லாதவன்' என்பதை அறிவுறுத்துகின்றது. அவன் ஒருகாலத்தில் இல்லாமலிருந்து பின்னை யொருகாலத்துத் தோன்றினவனாய் இருப்பினன்றோ அவ்வாறு ஒருகாலத்துத் தோன்றினவன் பின்னே ஒரு காலத்து இறந்து கேடுறுவா

16123



னென்று கொள்ளல் வேண்டும். கடவுளுக்குத் தாய் தந்தை யிவர் யாவரென்று எவரைக் கேட்பினும் அவரெல்லாம் அவற்குத் தாய் தந்தையர் இலரென்றே சொல்லுதலால், எவராலும் அவன் பிறப்பைக் கேட்டறிய முடியாமையின் அவன் பிறவாதவன் என்பது தெளியப்படும். அவ்வாறு தெளியப் படவே அவனுக்கு இறப்பும் இல்லையென்பது தானே போதரும். எவ்வெவ் வுயிர் பிறக்கின்றனவோ அவை யெல்லாம் இறக்கின்றன. பிறவி யெடுத்த உயிர்களுக்கே இறப்பும் நிகழக் காண்கின்றோமே யல்லது பிறவாதவைகள் இறத்தலை யாண்டுங் கண்டிலேம்.

'பிறப்புண்டேல் இறப்புண்டாம், இறப்புண்டேல் பிறப்புண்டாம்' என்னும் மூதறிஞர் மொழியும் இவ் வுண்மையினையே வலியுறுத்துகின்றது. பிறந்திறப்பன வெல்லாம் சிற்றறிவும் சிறுதொழிலு முடைய உயிர்களென்றும் பிறந்திறவாதவன் ஒருவனே இறைவன் என்றும் பகுத்துணர்ந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். இவ்வாறு உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாட்டினையும் அவ் வேறுபாட்டுக்கு ஏதுவான இலக்கணங்களையும் கடைப்பிடியாக உணர்ந்து கொள்ள வேண்டுவது பெரும்பயன் பெறவேண்டும் மக்களின் மெய்யுணர்ச்சிக்கு முதன்மையாகும். இவ்வேறுபாட்டினைக், கடவுளுக்குரிய பிறந்திறவாச் சிறப்பிலக்கணத்தை முதன் முதற் கண்டறிந்தவர்கள் சைவ சமய நன்மக்களே யாவர். பழைய யூதர்களும், மகமதியர்களுந் தவிர மற்றச் சமயத்தவர்களெல்லாரும் பிறந்திறக்கும் உயிர்களையே அவ்வவர்பாற் காணப்பட்ட சில ஆண்மைச் செயல்களால் கடவுளாகப் பிறழ உணர்ந்து அவை தம்மையே கடவுள் நிலையில் வைத்து வணங்கி வருகின்றார்கள். ஆனால் இத்தமிழ் நாட்டின்கண் உள்ள சைவசமயத்தவர்கள் மட்டும் பண்டைக் காலந் தொட்டுப் பிறந்திறவாத் தன்மையனே முழுமுதற் கடவுளாவன் எனத் தெளிய உணர்ந்து இன்றுகாறும் அக்கொள்கையிற் சிறிதும் வழுவாதவர்களாய் நிலைபெற்று வருகின்றனர். பிறப்பிறப்பில்லா இக்கடவுளிலக்கணத்தை நம் சைவ சமய ஆசிரியரும் பிறரும் வலியுறுத்திப் பாடிய பாட்டுக்களை முன்னரே நுங்கட்கு எடுத்துக் காட்டினேம். இன்னும் நம் சந்தானாசிரியராகிய அருணந்திசிவனாரும்,

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர், மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும் பிறக்கும் இறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதலால் இவையிலாதான் அறிந்து அருள்செய்வ னன்றே"



என்று வரையறுத்துக் கூறிய அருமைத் திருப்பாட்டும் நம்மனோர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கன்மேற் செதுக்கிய எழுத்துப்போல் நிலைபெற்று நின்று நினைவு கூரற்பாலதாகும்.

அங்ஙனமாயினும், முன்னே யூதர்களும் மகமதியர்களுங் கூட கடவுளுக்குப் பிறப் பிறப்புச் சொல்லவில்லை யென்றமையால், சைவ நன்மக்களே அக்கடவுளிலக்கணத்தை அறிந்தார்களென்பது யாங்ஙனமெனின், அவர்கள் கடவுளுக்குப் பிறப்பிறப்புச் சொல்லாவிட்டாலும் கடவுள் பிறந்திறவாதவன் என்பதனையும் உயிர்களே பிறந்திறப்பன என்பதனையும் சைவசமய ஆசிரியர்களைப் போலப் பிரித்துக் காட்டி அவர்கள் ஆசிரியன்மார் எவரும் தமது விவிலிய வேதத்திலாதல் குரானிலாதல் வலியுறுத்திச் சொல்லி விளக்கினாரில்லை. மற்றுத் தமிழாசிரியர்கள் நூல்களிலோ மிகப் பழைய காலந்தொட்டே கடவுள் வினையின் நீங்கினவனென்றும், அவன் பிறவாயாக்கையன் என்றும், தந்தை தாய் இல்லாதவனென்றும், எல்லா உயிர்களும் இறந்த சுடுகாட்டில் தான் என்றும் இறவாது நின்றே ஆடுவானென்றும் பலகாலும் வற்புறுத்திச் சொல்லும் மெய்யுரைகள் அடுத்தடுத்துக் காணப்படுகின்றன. ஏனைச் சமயத்தவர் நூல்களிலோ இங்ஙனம் வரையறுத்துரைக்கும் மெய்யுரையினைக் காண்டலியலாது. இறைவனிலக்கணத்தைத் தெளிய உணர்தலும் இயலாது. ஆகவே பிறப்பு வளர்ப்புகள் ஒருவாற்றானும் கேட்டறியப் படாத முதல்வனுக்கு எவ்வகையான கேடும் எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழாதென்பது தெரித்தற் பொருட்டாகவே 'கேடொன்றில்லான்' என்னுஞ் சொற்றொடரைக் 'கேட்டாருமறியாதான்' என்னுஞ் சொற்றொடர்க்குப் பின்னே பெரிதும் இயைபுபடவைத்து மாணிக்கவாசகப்பெருமான் அருளிச்செய்வாராயினர்.

இனிக் 'கிளையிலான்' என்பது 'சுற்றத்தாரை இல்லாதவன்' என்று பொருள்படும். உறவினரைக் குறிக்கும் சுற்றம் கேள் உறவு முதலான பல தமிழ்ச் சொற்களிருக்கவும் அவற்றையெல்லாம் விட்டுக் கிளையென்னுந் தமிழ்ச் சொல்லால் அடிகள் அதனை அருளிச் செய்திருக்கும் நுட்பம் ஆராயற்பாலது. கிளை யென்னுஞ்சொல் ஒருவர்க்கும் அவரோடு உடம்பின் தொடர்புடையார்க்கும் உள்ள நெருங்கிய இசைவினைத் தெரிவிக்குமாறு போல் மற்றச்சொற்கள் தெரிவிக்கவில்லை. கிளையென்பது முதன் முதல் மரத்தின் கோடுகளுக்கே பெயராக வழங்கப்பட்டதாகும். ஒரு மரமும் அம்மரத்தினின்று பல கவர்களாகப் பிரியும் கிளைகளும் ஒன்றைவிட்டொன்று வேறாகாமல் பெரிதும் இயைந்து

நிற்கின்றன. இங்ஙனமே ஒருவனுக்குக் கிளைகள்போல் நெருங்கிய தொடர்புடையராதற்குரியார் அவன் தான் பிறத்தற்கு இடமான தாய் தந்தையரும் தன்னோடுடன்பிறந்த தமையன் தம்பி முதலியவரும் தம்மினின்றுபிறக்கும் மக்களும் அம்மக்களினின்று பிறக்கும் மக்களும் தன்னோடுடன்பிறந்தாரினின்று பிறக்கும் மக்களும் அம்மக்களுக்கு மக்களும் என அவனோடு நெருங்கிய உறவு வாய்ந்தாரே யாவர். மற்றச் சுற்றத்தார் உறவினர் கேளிர் என்பவரெல்லாம் அவனுக்கு அத்துணை நெருக்கம் உடையாரல்லர். அதுபற்றியேதான் ஒருவனுக்கு மிக நெருங்கிய உடம்பின் தொடர்புடையாரைக் குறித்தற்கு மாணிக்கவாசகப் பெருமான் கிளையென்னுஞ் சொல்லைச் சிறந்ததொன்றாக எடுத்துக் கொண்டார்.

இனி இறைவன் தான் பிறத்தற்கு இடனான தாய்தந்தையரும் தன்னோடுடன்பிறந்தாரும் தனக்கு மக்களாவாரும் அம் மக்களுக்கு மக்களாவாரும் தன்னுடன்பிறந்தார்க்கு மக்களாவாரும் அம் மக்களுக்குப் புதல்வராவாரும் இல்லாதவனென்பது முன்னமே பெறப்பட்டமையால், அத்தகைய நெருங்கிய சுற்றத் தொடர்பு சிறிதுமில்லாதவன் என்பதை அறிவித்தற்கே 'கிளையிலான்' என்றார். கிளைஞராகிய பெருந் தொடர்பு இல்லாதவர்களுக்கு அத் தொடர்புபற்றி வரும் மற்றைச் சுற்றத்தாரும் இல்லாமை தானே பெறப்படுமாதலால், இறைவனுக்கு வேறு அகன்ற சுற்றத்தாரும் இல்லை என்பது இது கொண்டு முடிக்கப்படும். நெருங்கிய உடம்பின் தொடர்பிலிருந்தே ஏனை எல்லாச் சுற்றங்களும் அச் சுற்றங்களைப்பற்றி வரும் பல் வேறு அல்லல்களும் ஒன்றிலிருந் தொன்றாய்க் கிளைக்கக் காண்டலால், அவ்வெல்லாவற்றிற்கும் அடிப்படையான உடம்பின் தொடர்பினை இறைவன் ஒரு சிறிது மில்லாதவன் என்பது தெரித்தற்கே உடம்பின் தொடர்புக்குப் பெயரான கிளையென்னுஞ் சொ[illegible] எடுத்தாண்டு அச் சொல்லால் எவ்வகைத் தொடக்கு மில்லா இறைவனியல்பைச் சுருங்கச் சொல்லல் ஆழமுடைத்தாதல் எ[illegible]னும் அழகுபெறக் கூறிய அடிகளின் அறிவின் திறத்தை [illegible]னென்பேன்!

அங்ஙனமாயின், எண்ணிறந்த உயிர்கள் இறைவன் என்று[illegible]ளானே அன்று தொட்டே அவனிடத்தில் தாமும் தம்மிடத்தி அவனுமாக நெருங்கிய தொடர்புடையராய் இருத்தலால் உயிர்களை அவனுக்குக் கிளைஞராகக்கூறுதல் பொருத்தமன்றோ எனின், கிளைஞரென்பார் ஒருவருக் கொருவர் உதவியுந் துணையுமாய் இருக்குந் தன்மையராவர். இது கிளையென்னுஞ் சொல்லின் முத பொருளினாலேயே இனிது விளங்கா நிற்கும். எங்ஙனமெனின்,



மரத்தாற் கிளையும் கிளையால் மரமும் உயிர் வாழ்கின்றன. அடிமரத்தை வெட்டினால் கிளைகள் பட்டுப்போம். கிளைகளையெல்லாம் வெட்டினால் மரமும் பட்டுப்போம். இது பெரும்பாலும் எல்லா மரங்களிடத்தும் காணப்படும் உண்மை நிகழ்ச்சியாம். இது போலவே தாய் தந்தையர் தம் மக்கள் இளைஞரா யிருக்கும் பொழுது அவர்க்கு உதவியுந் துணையுமாய்நின்று அவரைப் பாதுகாத்து உயிர்வாழச் செய்கின்றனர். மக்கள் வளர்ந்துபெரியராம் பொழுது தம் தாய்தந்தையர் ஆண்டின் முதிர்ந்து வலிவுகுன்றப் பெறுதலால் மக்கள் அவர்க்கு உதவியுந் துணையுமாய் நின்று அவரை உயிர்வாழச் செய்கின்றனர். இங்ஙனமே உடன் பிறந்தாரும் ஒருவருக்கொருவர் உதவியுந் துணையுமாய் நின்று உயிர் வாழ்தலை நேரே காண்கின்றோம். ஆகவே கிளைஞராவாரெல்லாரும் ஒருவருக்கொருவர் உதவியுந் துணையுமாய் நின்று ஒழுகினால் மட்டும் அவர் கிளைஞரென்று பெயர் பெறுதற்குரியாரென்பது பெறப்படும். இந்த முறையில் வைத்துக் கடவுளும் கடவுளோடு தொன்று தொட்டு இருக்கும் உயிர்களும் ஒருவருக் கொருவர் உதவியுந் துணையுமா யிருந்து உயிர்வாழுந் தன்மையராயின், அவர் தம்மையுங் கிளைஞரென்று மொழிதல்பொருந்தும். கடவுள் உயிர்களுக்கு உற்ற துணையும் உதவியுமாய் நிற்றல்போல உயிர்களுங் கடவுளுக்கு உற்ற துணையும் உதவியுமாய் நின்று அவரை உயிர்வாழச்செய்குவாராயின், அவரை அவர்க்குக் கிளைஞரென்று கூறுதல் பொருத்தமாம். மற்று உயிர்களோ பண்டு தொட்டே அறியாமை யென்னும் பேரிருளால் விழுங்கப்பட்டுத் தம்மையும் உணராமல் தம் உயிர்க்குயிராய் நின்று தமக்குப் பேருதவி செய்துவரும் முதல்வனையும் உணராமல் வலியற்ற நிலையினராய் இருத்தலாலும் இறைவனுடைய உதவியைப் பெற்று அறிவுவிளங்கித் தம்மையுந் தலைவனையும் உணரும்நிலை வந்தஞான்றும் தம்முடைய அறிவும் செயலும் இறைவன்றன் பேரறிவு பேராற்றல்களின் முன் வலிவிழந்தனவாயே இருப்பதல்லது அவ் விறைவற்குத் தம் அறிவாலும் தம் செயலாலும் செய்யத்தக்க உதவி சிறிதுமில்லாமையாலும், எல்லாச் செல்வமும் செயலும் உடைய இறைவனுக்கு முன் அவ் உயிர்கள், செயலிழந்த சிறிய இரவலரே யாவரல்லது அவனுக்குக் கிளைஞராதல் ஒருவாற்றானுஞ் செல்லாது. இங்ஙனம் எண்ணிறந்த இவ் உயிர்த் தொகைகளை யெல்லாம் எல்லாம் வல்ல இறைவனுக்குக் கிளைஞராகச் சொல்லுதல் ஒருவாற்றானும் இசையாமையால், இவ் உண்மையை நன்குணர்ந்த மாணிக்கவாசகப் பெருமான் 'கிளையிலான்' என்று அருளிச்செய்தாரென்பது.

# இரண்டன்மை (அத்துவிதம்)

[திரு. மா. வே. நெல்லையப்பப்பிள்ளையவர்கள் B. A.]

உலகநெறியிலுள்ள இரண்டன்மையைப் பற்றிய உண்மை முன்னே செந்தமிழ்ச்செல்வி சிலம்பு ரு பரல் ௩, ௪, ௬ ல் எழுதப் பட்டது. அவைகளின் தொடர்பாகச் சில கருத்துக்களை இயன்றவாறு வரைதலே கட்டுரையின் கருத்தாகும்.

சிறப்பியல்பு நிலையில் (சொரூபநிலை) சிவம் ஒரு பொருளா யுள்ளது. இந்த நிலையில் அவனது அருளாற்றல் (அருட்சத்தி) அவனிடம் அடங்கியுள்ளது. பொது இயல்பு நிலையில் (தடத்த நிலை) சிவத்தினிடத்திலிருந்து உள்ளடங்கியிருக்கும் அருளாற் றல் விரிந்து சிவம் ஆற்றல் என இரண்டும் இரண்டு பொருளா யுள்ளன. இந்த அருளாற்றலானது உருத்திரன், திருமால், நான்முகன் என்னும் மூன்றாய் விரிந்து மூன்று வடிவங்களாய் விளங்குகின்றது. சிவனொருவனே நான்முகனாகிப் படைத்தற் றொழிலையும் திருமாலாகிக் காத்தற் றொழிலையும் உருத்திரனாகி அழித்தற்றொழிலையும் செய்கின்றான்.

இக்கருத்துக்களையே திருஞானசம்பந்தப்பெருமான்

"ஒருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விரிசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை"

என்று தாம் பாடிய திருவெழுகூற்றிருக்கைத் தேவாரத்திலும்,

"மூவருமாகி இருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி"

என்று திருப்பேணுபெருந்துறைத் தேவாரத்திலும் பாடியருளி னார். திருநாவுக்கரசு அடிகள்

"உருமூன்றாய உணர்வின்கண் ஒன்றானை"

என்று திருவாலம்பொழில் திருத்தாண்டகத்திலும், சுந்தரமூர்த்தி அடிகள்

"மூவராயு மிருவராயு முதல்வ னவனேயாம்"

என்று திரு எதிர்கொள்பாடித் தேவாரத்திலும் பாடியருளினார் கள்.



சிவபெருமான் ஒருவனே பொது இயல்பு நிலையில் உருத் திரன், திருமால், நான்முகன் என்னும் மூன்றுவடிவி (மூர்த்தி)க ளாகியும் அவர்களுக்கு முதல்வனாகியும் விளங்குகின்றான். அப் படி விளங்குமிடத்துச் சிவபெருமானுடைய அருளாற்றலில் ஒரு சிறு கூறு உருத்திரனிடத்திலும், அதனிலும் சிறிய ஒரு கூறு திருமாலிடத்திலும், அதனிலும் சிறிய ஒரு கூறு நான்முக னிடத்திலும் விளங்குகின்றது. அம்மூவரும் சிவபெருமானுடைய அருளாற்றலைக்கொண்டே தங்கள் தங்கள் தொழிலைச் செய்கின் றார்கள். சிவபெருமானுடைய அருளாற்றலானது மூவர்களிட மாய் விளங்குமிடத்து அவனுக்கும் உயிருக்கும் உளதாய் ஒன் றாய் நிற்கும் நிலை, வேறாய் நிற்கும் நிலை, உடனாய் நிற்கும் நிலை என்று கூறப்பட்ட மூன்றுவகையான இரண்டற்ற (அத்துவித) நிலைகளும் உளவாம் என்று நாம் உய்த்துணரலாம். ஒன்றாய் நிற் கும் நிலை திருமாலிடத்திலும், வேறாய் நிற்கும் நிலை உருத்திர னிடத்திலும், உடனாய் நிற்கும் நிலை அயனிடத்திலும் உள்ளன. இப்படி அறியுந் தன்மையில் மூன்று இரண்டற்ற நிலைகளும் ஒன் றுக் கொன்று தொடர்பு இல்லாதவைகள் என்று நாம் அறிதல் கூடாது. ஒவ்வொரு நிலையிலும் ஒரு நிலை மேலிட்டிருந்தாலும் மற்ற இரண்டு நிலைகளும் குறைவாகவேனும் அதனுடனே உள் ளன. அயனுடைய படைத்தற் றொழிலில் செயல்மிக்கு விளங்கு கின்றது. மற்றைய அறிவு வேட்கைகளும் அதனுடனே குறை ந்து விளங்குகின்றன. திருமாலின் ஆற்றலை நான்முகனும் உருத் திரன் ஆற்றலைத் திருமாலும் நேரே கொண்டு தத்தம் படைத்தல் காத்தல் தொழில்களைச் செய்கின்றனர். திருமாலினுடைய காத் தற் றொழிலில் வேட்கையின் தன்மையாகிய அன்புமிக்கு விளங்கு கின்றது. மற்றைய இரண்டும் குறைவாகவாயினும் உடன் விளங்குகின்றன. திருமால், நான்முகன் ஆற்றலைக் கொண்டு காத்தற்றொழில் செய்வதில்லை. உருத்திரனுடைய அழித்தற் றொழிலில் அறிவுமிக்கு விளங்குகின்றது. ஆனால் அதில் அன்பு ...ல் இரண்டுங் குறைவாக விளங்குகின்றன. உருத்திரன் செய் ... அழித்தற் றொழிலில் திருமாலாவது நான்முகனாவது ...டர்பு படுவதில்லை.

மூன்று தேவரையும் செயலாளர்களாகக் (அதிகாரிகளாகக்) ...யிடத்துப் படைத்தற் றொழிலில் நன்கு பயின்றவர்தான் ...த்தற் றொழில் பெறத் தகுதியுள்ளவர் ஆவர். அழித்தற் றொழிலைச் செய்கிறவர் காத்தற் றொழிலையும் படைத்தற் றொழிலை ...ம் செய்யத் தகுதியுடையராவர். காத்தற்றொழிலைச் செய்கிறவர் படைத்தற் றொழிலையுஞ் செய்யத் தகுதிஉடையராவார். ஆனால் ...வர் அழித்தற் றொழிலைச் செய்யத் தகுதி யுடையவ ரல்லர். படைத்தற் றொழிலைவிடக் காத்தற்றொழிலும் காத்தற் றொழிலை

விட அழித்தற்றொழிலும் மேலான செயல்களாகும். மேலான செய்கைக்குள் கீழான செய்கை அடங்கும். கீழான செய்கைக்குள் மேலானசெய்கை அடங்காது. செயலாளர் தங்கள் செய்கையைச் செய்தற்குத் தக்க வலியுடையவர் ஆவார்கள்.

உலக வழக்கில் இந்த உண்மையை வைத்து அறியுமிடத்துக் கற்றறிவில்லா மாந்தர் வினைத்திறன் வேண்டப்படாதவையாயும் பிறரால் ஏவப்பட்டவையாயு முள்ள தொழில்களைச் செய்கிறார்கள்; கற்றறிவுடையவர்களில் கீழான அறிவுடையவர்கள் கணக்கு வேலை எழுத்து வேலை முதலிய தொழில்களைச் செய்கின்றார்கள்; கற்றறிவுடையவர்களில் மேலான அறிவுடையவர்கள் தாங்களாகவே ஒரு தொழிலைச்செய்ய வல்லவர்களாயும் கணக்காளர் எழுத்தாளர் முதலிய பலரைத் தங்களின்கீழ் வைத்துக்கொண்டு வேலை வாங்குகிறவர்களாகியும் இருக்கிறார்கள். முதலாவது வகுப்புக்குச் சேர்ந்த அறிஞர்கள் தாங்கள் ஒருவராலும் ஏவப்படாமல் தங்கள் தொழிலைச் செவ்வையாய்ச்செய்ய வல்லவர்கள். இரண்டாவது வகுப்புக்குச் சேர்ந்த கணக்காளர்களும் எழுத்தாளர்களும் இன்ன வேலையைச் செய்தல் வேண்டுமென்பதுபற்றி முதலாவது வகுப்பு அறிஞர்களால் ஏவப்பட்டும் செய்யும் வகையில் தாங்களாகவே செய்தும் தங்கள் வேலையைச் செய்கிறார்கள். மூன்றாவது வகுப்பு வேலையாளர்கள் இன்ன வேலையைச் செய்தல் வேண்டும் என்பதிலும் எப்படிச் செய்தல் வேண்டுமென்பதிலும் பிறருடைய மேற்பார்வையிலே வேலை செய்யத் தகுந்தவர்கள். அரசியல் வேலைத் துறைகளில் (Government Departments) ஒவ்வொரு துறையிலும் மேலே சொன்ன முத்திற வேலையாளர்களையும், மூன்றாவது வகுப்பு வேலை செய்து திறன்வாய்ந்தவர்கள் இரண்டாவது வகுப்பு வேலைக்குத் தகுதியுள்ளவர்களாக மாற்றப்படுவதையும், இரண்டாவது வகுப்பு வேலை செய்து திறன்வாய்ந்தவர்கள் முதலாவது வகுப்பு வேலைக்குத் தகுதியுள்ளவர்களாக மாற்றப்படுவதையும் நாம் காணலாம்.

இரண்டற்ற உண்மையைப்பற்றிய மூன்று நிலைகளும் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு ௫, பரல் ௯-ல் எழுதப்பட்ட கட்டுரையில் அறிவு வேட்கை செயல்களாக விளக்கப்பட்டனபோல் இக்கட்டுரையில் மூன்று தேவர்களாகவும் ஒருவாறு என் சிற்றறிவுக் கெட்டியவாறு விளக்கப்பட்டன. இது முடிபுரையாகக் கூறப்படவில்லை; ஆராய்ச்சியுரையாக எழுதப்பட்டது. கற்றறிந்த அறிஞர்கள் இதனை விளக்கியும் சேர்த்தும் குறைத்தும் தக்க ஏதுக்களுடன் மாற்றியும் எழுதி அறிவிப்பார்களானால் அவர்களுக்கு நன்றி பாராட்ட நான் கடமைப்பட்டுள்ளேன்.

(தொடரும்)



# தமிழ்நாட்டுச் சைவ இளைஞர்கடமை

[இலங்கை. S. சின்னதம்பியவர்கள்]

(௩௧௯-ம் பக்கத் தொடர்ச்சி)

'திசையனைத்தின் பெருமையெலாம் தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ள நிலைபெருக'

என்று ஞானசம்பந்தப் பெருமானது பிறப்பின் பெருமையைப் பற்றி ஆசிரியர் சேக்கிழார் அடிகள் உரைத்தருளிய செஞ்சொற்களை உள்ளுதோறெல்லாம் உளம் நிறைந்த உவகையும் இறும்பூது மன்றோ தமிழ்ப்பெருமை யுணர்ந்தார் அகத்தில் நின்றொளிரும். இந்நாட்போல் அக்காலத்திலும் தமிழ் நாட்டில் தாய்மொழி வழக்குக் குறைந்திருந்ததெனவும், அயல் மொழியாகிய ஆரிய மொழியே பெரிதும் வழங்கப்பட்டு வந்ததென்றும் இச்செய்யுளால் அறியக்கிடக்கின்றன. ஆயின் அறிவு முதிரா முழுக் குழவிப் பருவத்தே இறையருள் கனிந்த இன்னடிசில் இறைவியா ஊட்டப்பெற்று இறவாப் பேரின்பத் துய்த்து இன்னருள் பழுத்த சொன்மாரி உலகுய்வான் பெய்தற்குப் பிள்ளைப் பெருமான் தெரிந்தெடுத்துக் கொண்டதாகிய ஒப்பில் பெருமை வாய்ந்த அருமைத் தமிழ் மொழிக்கு அக்காலத்தில் உள்ள ஊறு கண்டு மனம் வருந்திய நம் ஆசிரியர் சேக்கிழாரடிகள், எம் சிவஞானக் கன்று பிறந்தருளிய பெருமையைக் கூறுமுகத்தான், இறைவனருளப்பட்ட தனிப்பெரு நூல்களென்று பெரிதும் போற்றப்பெற்றுத் தமிழ் நாட்டினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவந்த 'வேதாகம'ங்களெனும் வடமொழிப் பெருநூற்றுறையுளது பெருமையெலாம், பகலவனொளியிற் றம் ஒளியெலாம் விழுங்கப்பெற்று மறைந்துலவும் உடுக்கள்தம் பெருமையேயாம் ஆதலால், குழவிப்பெருமான் மனங் குழைந்தருளிய தமிழ் மறையின் மாண்பிற்கு முன் தலையெடுத்து நிற்றல் இயலாதெனும் கருத்துப் பற்றி "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல' என்று திருவாய் மலர்ந்தருளியது நினைக்குந்தோறும் என்பெலாம் புகுந்து இன்பம் பயக்கின்றது. பிறிதோரிடத்தில் (திருநாவுக்கரசு புராணம் ௩௮௰-செய்யுள்) ஞானசம்பந்தப் பெருமானை 'வண்டமிழா லெழுதுமறை மொழிந்த பிரான்' என்று ஆசிரியர் குறித்ததும் ஆராய்ச்சிக்குரியது. ஈண்டு 'எழுது மறை' யென்பது சம்பந்தப் பெருமானது தேவாரத் திருவாக்கு

களே யாம். வடமொழிக்கணுள்ள மறைகள் ஏட்டிலெழுதும் இயல்பில்லாது பயில்வோரெல்லாம் அவற்றை அறிந்தோரிடத்துக் காதாற் கேட்டு நெட்டுருச் செய்து நினைவில் வைக்கவேண்டும் தன்மையுடைத் தாகையால், காலப் போக்கில் அவை தம் உண்மைநிலை பிறழ்ந்து மாறுதலடையும் என்பது ஒரு தலை. எட்டிலமைந்த நூல்களே ஒரு சில நூற்றாண்டுகளுள் பெரிதும் திரிபெய்தியதை இயல்பாய்க் காண்டு மாகையால், எழுத்திலமையாதியங்கும் இவ் வடமொழி வேதங்கள் அவை தோன்றிய காலத்திற்கும் இக் காலத்திற்கு மிடையில் எத்துணை மாறுதலடைந்திருக்குமென்று கூறவும் வேண்டுமோ! இறையருள் விழைவிற் றோய்ந்து நின்ற ஒரு சில முனிவர்கட்கு முதன்முதல் இவ்வாரிய மறைகள் இறைவனா லருளப்பட்டிருத்தல் கூடும். ஆயின் அவைகள் அருளப்பெற்ற மொழியின் நிறைவின்மை காரணமாக இந் நாள் தம் தாயநிலை முழுதும் பிறழ்ந்து, தம் ஆசிரியர் பெருமைக்கும் இழுக்கந்தேடிப் பல்வேறு புல்லிய உரைகளேயும் முறைகளேயும் தம்முட் கொண்டு நிலவுகின்றன. ஆனது பற்றியே திரிபுறும் நீர்மை யுடைத்தாகிய எழுதா மறைகளைப்போ லில்லாது மாறு நிலைப்பேறுடைய பெருமை வாய்ந்த தமிழ் மறைகளை 'எழுதுமறை' யெனப் புராண ஆசிரியர் புனைந்து கூறினர் போலும்!

'கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல் கைகாணு மந்திரங் கண்ணுதலோன் கூறல்' என்றும்,

> "அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத்தேடு
> மதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப்
> பரபதமும் தற்பரமும் பரனே யன்றிப்
> பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
> எரியிடைவே காதுஆற் றெதிரே யோடும்
> என்புக்கு முயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றும்
> கரியைவளை விக்கும்கன் மிதக்கப் பண்ணும்
> கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே"

என்றும் எழுந்த திருவாக்குகள் நம் தமிழ் மறையின் பெருமைக்குத் தனிப்பெருஞ் சான்று பகர்கின்றன. உரையிலடங்காப் பெருமை வாய்ந்த மாணிக்க வாசகரது திருவாசகங்களைச் செவிமடுத்து ஆரா இன்பந் துய்த்த பேரா இயற்கைப் பெம்மான் மணிமொழித் தேவனுடைய இன்னுரைகளை உலகுய்வான் ஏட்டிற் றெருக்கவேண்டுமென்னும், பேரவாக் கொண்டு அன்னவர் பால் ஓர் அந்தணர் வடிவமாய் நண்ணி 'அன்ப, நின்



என்பெலாம் கனிந்தொழுகும் திருவாசகத்தை யான் ஓதித் துன்பம் நீக்கி இன்ப மடையும் பொருட்டு எழுதிக்கொள்ள வந்தேன். ஒருகால் அவற்றை விளம்பவேண்டும்' என்று கேட்க அடிகளும் மனமகிழ்ச்சியோடு அவற்றைப் பகர்ந்தருளினர். அந்தணராவார் மேலும் 'அன்பனே! நின் திருவாசகத்தின் இனிமை என் என்பெலாம் சென்று செறிந்தது. ஆகையால் அப்பனைத் தலைவனாக வைத்து ஓர் கோவையும் தொகுத்தருளல் வேண்டும்' என்று இரந்தனர். அதற்கு அடிகள் பெரிதும் மனமுவந்து 'திருக்கோவையார்' எனும் விழுமிய நூலைக் கடலமுதெடுத்துக் கரையில் வைத்ததுபோற் பரப்பின் தமிழ்ச் சுவையெலாம் திரட்டித் திறம்பட உரைத்தருளினர். கரந்த கோலங்கொண்ட அரவணி அந்தணனும் உடனே நாயனார் பெருமையையும் அவரது நூல்களின் விழுமிய மாண்பையும், அந் நூல்களுக்கும் தனக்கும் உரிய உவகைத் தொடர்பையும் உலகினர்க்குத் தெரிப்பான் ஏடுகளினிறுதியில் "மாணிக்க வாசகர் சொல்லச் சிற்றம்பலமுடையார் எழுதியது" என்று பொறித்தருளினன். இது போன்ற புகழுடைச் செயலை நினைந்து கனியா திருத்தலுங் கூடுமோ! அன்புடையீர் கூறுமின்! எனவே இதுகாறுங் கூறியவாற்றால் வடமொழி வேதாகமங்களெனும் மறை நூல்கள், நம்மருமைத் தமிழ் மறைகளாம் தேவார திருவாசகங்களினும் பார்க்கத் தினைத்துணையேனும் பெருமை மிகுந்தன அல்ல என்பதூஉம், வடமொழி மறைகளைப்போல் எமது மறைகளும் இறைவனா லருளப்பட்டனவேயாமென்பதூஉம், வடமொழிச் சுலோகங்களைப்போற் கரடு முரடான நீர்மையில்லாது பயில்வோர் மனத்தை யெல்லாம் சிவன்பா லீர்க்கும் சீரியபான்மையும் இசையினும் மிக்க இனிமையும் நம் தமிழ் மறைகளுக்குத் தனியுரிமையா மென்பதூஉம் உய்த்துணரற் பாலனவாகும். ண்மையிவ்வா றிருப்பதால் தமிழ்நாட்டுச் சைவக் கோவில்களி ம் பிற விடங்களிலும் இறை வழிபாட்டிற்குச் சமஸ்கிருத லோகங்கள் வேண்டாமென்றும், தமிழ் மறைகளின் துணை காண்டு அவற்றைச் செய்வதே யுகந்ததென்றும் யாம் உள் தை உரைத்துழி எம்மேற் பெரிதும் வெகுண்டு சொல்லம்புகள் ய்து பகைமையும் பொறாமையும் பாராட்டித் தாம் பிடித்த யலுக்கு மூன்று காலெனக் குருட்டுத்தனமாய் நின்றுளாரும் பதையார்க்கு மனஞ்சோராது மேன்மேலும் உண்மை தெருட்டலே செய்யக் கடவேம். தெருளாதார்க் கிரங்கிச் சிவத்தை வண்டுதலே யொழிய அவரை இழித்துக் கூறல் உகந்ததன்று.

அன்பர்களே! தமிழ் மறையின் தனிப்பெருமாண்பை இனி மேலாகுதல் உணருமின்! உணர்ந்துய்மின்! நறைபழுத்த தமிழ்

மறையின் துணைகொண்டு இறைவணக்கம் புரிமின்! பண்ணும் பொருளும் பொலிந்து மிளிரும் செழுந்தமிழ்த் திருமறைகளாகிய தேவார திருவாசகங்களை யன்றே கோவில்களிலேனும் பிற விடங்களிலேனும் யாம் ஓதல் வேண்டும். ஓதுவித்தலும் வேண்டும். எவற்றினும் விழுமியவாயுள்ள தமிழ் மறைகட்குரிய மேன்மையைக் கொடாது, ஆரியமொழிச் சுலோகங்களையும் வேதங்களையும் மட்டும் பேணி வந்ததுபோல் இனிமேற் பேதுற்று மயங்காது தெளிந்துய்வோமாக!

சமயப் பெரு நிலையங்களாயுள்ள நம் கோவில்களில் நிகழ்வனவற்றுள் இன்னுமொன்று ஆராயற்பாற்று. நம் மில்லங்களிலிருந்து ஒருப்பட்ட மனத்துடனும் ஒடுங்கிய உள்ளத்துடனும் இறைவனைத் தொழுதல் இயலாதாகையா னன்றோ, கடவுள் வழிபாட்டிற் கென்று புறத்தே இக் கோவில்களெல்லாம் அமைக்கப்பெற்றன. மலமறைப்பினாற் கறைசெழுமி யிருக்கும் நம்மனோரகத்தைத் தூய்மை யாக்கி இறைவனைத் தொழற்கென்று யாம் கோவில்கட்குச் செல்ல, ஆண்டு நிகழ்வனவெல்லாம் எம்பெருமானை வழுத்துதற்குகந்த மனவமைதி ஒரு சிறிதேனும் தாராவாய் மனக்குழப்பத்தையே யுண்டாக்கிக் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொள்ளுவதுபோற் செய்திடுகின்றன. பாருங்கள்! கடவுளுக்குகந்த வேள்வியாற்றுகிறே மென்ற பேய்க் கொள்கைக்கு ஆட்பட்ட புல்லறிவாளர் பலர் ஆண்டவனது திருக்கோவில்களிலே பல்லாயிரக் கணக்கான சிற்றுயிர்களைக் குருதி பெருகச் சிதைத்தும், சிதைக்கப்பெற்ற வூன்களை விலைகூறி விற்றும், கட் சாராய மாதிய பல் வேறு குடிவகைகளைக் குடங்குடமாய் மொண்டு வெறிக்கூத்து நிகழ்த்தியும் இன்னோரன்ன பல புன்மைகளைப் புரிந்து நிற்கும் பொழுது, எம்பெருமானை யார்தான் வழுத்தல் முடியும். இது மட்டோ, இவ்வளவில் நில்லாது, பண்பொன்று மில்லாப் பரத்தையர் நடனங்கூட இறைவனுக்குகந்ததென நினைந்து அவர்களை அழைத்து அப்பன் நிலையங்களில் ஆட்டம் நிகழ்த்தியும் இன்புறுகின்றனர்! ஆ! இவையெலாம் சமய வழிபாட்டின்பாற்பட்டனவாமோ! இவற்றை யெல்லாம் தமிழ் நாட்டினருக்குப் போதித்தருளிய பேராசிரியன்மாரும் யாரோ தெரிகிலேம்! அடியார் உவகும் ஆண்டவன் திருக்கோவில்களெல்லாம் படிற்றொழுக்கம் பூண்ட புல்லர் விழைவுறு களியாட்ட மன்றங்களாக (Theatres) வன்றோ இக்காலத்தில் மாறிவிட்டன! திருவிழாக் காலங்களில் நிகழ்வுறும் புன்மைகள் இன்னும் பலப் பல உண்டு. வாணவேடிக்கை பார்க்கவென்றும் வடிவான சட்பளம் வந்ததென்றும் வயங்கு கோதையில் வண்மலர் சூடியும் இலங்கு நுதற்கண் துலங்கு திலகம் துண்ணிதாய்ச் சுட்டியும் பொன்னும் மணியும் பொலிவுறப் புனைந்த பல்வேறணிகள்



எழில்பெற அணிந்தும் பத்து நூறு பெறுமதியான பட்டும் பருத்தியும் பொற்புற உடுத்தும் முன்னும் பின்னும் பார்த்துப் புன்னகை முகிழ்த்துப் புதியதோர் மகிழ்ச்சியுடன் பெரிதும் அலங்காரமாய் நாடகக் கணிகையர்போல் சைவமாதர்கள் திருக்கோவில்கட்குச் செல்வதைக் கண்டேம் ஐயகோ! சைவப் பெண் மணிகள் தம் நிலைமைதான் என்னே! திருக்கோயிலுக்குச் செல்லும் திருக்கோலம் இது தானோ! அறிவுடையீர் கூறுமின்! மாலைப் பொழுதிற் கடற்கரையோரமாய்க் கொழும்புப்பட்டினத்தில் உலாப்போகும் மங்கையர்க்கும், யாழ்ப்பாணத்தில் திருக்கோவில்கட்குப் போகும் மாதர்கட்கும் புறத்தேயோர் வேற்றுமையுமில்லை. அகத்தேயேனும் வேற்றுமையுண்டோ தெரிகிலேம்! பதக்கஞ் சங்கிலியில்லாது சிவபிரான் திருக்கோயிற்குச்சென்று பத்தியுடன் எம் அப்பனை வழுத்துதல் முடியாதெனத் தங்கணவருடன் பிணங்கி நிற்கும் பத்தினிப் பெண்டிர் பலரை இற்றை நாளிற் காணல்கூடும். ஆ! அறியாமையின் பெருமிதம் தான் இருந்தவா றென்னே! தமிழ் நாட்டுச் சைவமாதர்கட்கு விழுப்பெரும் எடுத்துக் காட்டாகத் திகழ்வுறும் திலகவதியம்மையார், மங்கையர்க்கரசியார், புனிதவதியார் போன்ற மாதரசிகள் தம் நலங்கெழு வரலாற்றினையும் அன்பிற் கனிந்த ஒழுக்கத்தினையும் அன்னார்தம் எளிய வாழ்வின் விருப்பத்தையும் இன்னாள் எம்மினியார் அறிந்திலர்போலும்! 'செப்பரும் பெருமை யன்பாற் றிகழ்திரு வாலங்காடா நற்பதி தலையினாலே நடந்து' காரைக்காலம்மையார் எம்பெருமானைப் பரசியிருப்ப, இற்றை ஞான்றுள்ள பெண்மணிகட்கு ஒரு கால்கட்டை தூரத்தில் இருக்கும் கோவில்கட்குப் போவதென்றாற்கூட மோட்டார் வண்டியும் கைவண்டியும் வேண்டியதா யிருக்கிறதே! என்ன அறியாமை!

...

ஓ! தமிழ்த்தாயீன்ற தகைசால் நங்கைகாள்! நுங்களை ஒன்று வேண்டுதும்; அன்புடன் அதற்கிசைவீரேயென்று நம்புகிறேன். ஊழ்வினைக் காரணமாகி இந்நாள் எம்நாட்டிடைத் தோன்றி எம்பழைய சிறப்பை யெல்லாம் சிதைத்துப் பொய்ம்மையையும் ஆரவார நீர்மையையும் பெருக்கிக் காட்டுத் தீப்போற் பரந்து எம்மனோரை யெல்லாம் பற்றி மயக்கிவரும் மேலைநாட்டுப்போலி நாகரீகத்தின் பயனாக நும்மாற்பெரிதும் உவந்து பாராட்டப்படும் புறப்புனைவைத் தவிர்மின்! அகத்தூய்மையோடிசைந்த புறத்தூய்மையே ஆண்டவனுக்கு உவகை தருவது. அகத்தூய்மை யில்லாப் புறப்புனைவு ஆண்டவனுக்கு வெறுப்பைத்தருவது; அறிவுடையார்க்கெல்லாம் அது அருவருப்பை விளைக்கு மன்றோ! நெருநல் உளது இன்றில்லை யென்னும் நீர்

மையுடைத்தாயும், மலக்கடலின்பா லீர்க்கும் புன்மையுடைத்தாயும் உள்ளதாகிய இவ்வுடலை நீத்து இறைவனுடன் தலைக்கூடி இறவாப் பேரின்பந்துய்க்கும் ஒரு பெரும் நோக்கத்தையே கடவுள் வழிபாடானது குறிக்கொண்டிருப்ப, யாம் இன்னணம் புறப்புனைவு புரிதல் எம்நோக்கத்திற்கு முழுதும் முரணாய் முடியுமன்றோ? அன்புடை நல்லீர்! அப்பன் நிலையங்களை அலங்காரக் காட்சி நிலையங்களாகக் (Show Rooms) கருதாது இப்புல்லொழுக்கம் தவிர்ந்து நன்னெறிச் சேர்மின்! Hazeline Snowவுக்கும் Toilet (Powder)க்கும் ஈடாகத் திருநீற்றை நாம் திருநுதற்கண் நிகழ்வுறப் பூசிக்கொண்டு உண்மைச் சிவனடியார்தம் திருக்கோலத்துடனும் கந்தை மிகையாங் கருத்துடனும் எம் அண்ணல் நிலையங்களை நண்ணுதலே யாமுய்தற்குரிய நெறியென்பதைச் சாலவும் தெளிமின்! சைவ சமயமானது தற்கால வீழ்நிலையினின்றும் உய்யவேண்டுமாயின் அதுவும் பெண்மணிகளாகிய எம் தாய்மார்களாலேயே முடியவேண்டும். எம் அருட்டாயாகிய உமையம்மையாற் குழந்தைப் பெருமான் "எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்த பாலடிசில்" ஊட்டப்பெற்றதினாலன்றோ இத்தென்றமிழ் நாட்டின்கண்ணே மாண்புடைச் சைவ நெறியானது மறுபடியும் சீர் நிறைந்த நிலைபேறெய்தியது. அதையொப்பச் சைவமாதர்களாகிய எம் தாய்மாரனைவரும் தம் குழந்தைகட்கு முலையமுது ஊட்டும்போது சிவனருள் விழைவெனும் செழுந்தேன் குழைத்து ஊட்டுவாராயின் எம் நாடு சம்பந்தரன்ன சிவஞானக் கன்றுகள் மலிந்துள்ள திருநாடாய் விடுமே. மங்கையர் குலக்கொழுந்தா யிலங்கும் 'மங்கையர்க்கரசியார்தம் பெருமையை எம் பெண்மணிகள் உணராத புன்மையன்றோ எம் சமயத்தை இந்நிலையிற் புகுத்தி விட்டது. ஆ! ஆண்டவனே! 'மங்கையர்க்கரசியன் தவத்திற் சிறந்தவோர் மாதரசியை விரைவில் இந்நாட்டின் தோற்றுவித்து எம்மனோரை யெல்லாம் ஆண்டு கொ[illegible]த் வேண்டும்; இன்றேல் யாமெல்லாம் அழிந்து [illegible]ல் திண்ணம்.

(தொடரும்)

---

## பிழைதிருத்தம்

இந்த இதழில், ௬௯௰-ம் பக்கத்துக்குப் பின் ௬௬௧ முதல் எண்ணிட்டுப் பதினாறு பக்கங்கள் அச்சிடப்பட்டுள்ளதை, ௬௯௧ முதற் பதினாறு பக்கங்களாகக் கணக்கிட்டுக் கொள்க.



# தமிழ் இலக்கியம்
# TAMIL LETERATURE

## உலகநீதி

## ULAGANIDHI* (Worldly Virtue)

காப்பு.

உலகநீதிப் புராணத்தை யுரைக்கவே
கலைகளாய்வருங் கரிமுகன் காப்பு.

May the Lord of many sciences, the Elephan[t] face Ganesha be my help when I utter forth thes[e] words of ancient wisdom.

I. ௧. ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்.
Neglect not your daily study.

௨. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
Speak ill of no one.

௩. மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்.
Forget not your mother.

௪. வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.
Associate not with treacherous men.

௫. போகாத விடந்தனிலே போக வேண்டாம்.
Go not to forbidden places.

௬. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.
Do not speak of ill of any behind his back.

௭. வாகாருங் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே!

Praise rather my heart, Him mounted on th[e] Peacock, the wedded Lord of lovely Valli.

---

* The name is derived from the opening words, like the do'nt 2nd *warrants* for instance.

II. க. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
Do not wilfully tell a lie.

உ. நிலையில்லாக் காரியத்தைச் செய்ய வேண்டாம்.
Set not your hand to worthless tasks.

ங. நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்.
Become not familiar with poison.

ச. நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்.
Do not associate with those who keep bad company.

ரு. அஞ்சாமற் றனிவழியே போகவேண்டாம்.
Go not with fool-hardy courage a lonely fearsome way.

சா. அடுத்தவரை யொருநாளுங் கெடுக்கவேண்டாம்.
Ruin not those who throw themselves on your mercy.

எ. மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே!

III. க. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
Follow not your own sweet will.

உ. மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்.
Believe not in the kinship of an enemy.

ங. தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்.
Bury not hard earned treasure, stinting yourself the necessaries of life.

ச. தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
Do not give up righteousness.

ரு. சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டாம்.
Lose not your temper nor suffer from the evil effects thereof.

சா. சினத்திருந்தார் வாசல்வழி சேர வேண்டாம்.
Go not by the doors of those angered against you.

எ. வனந்தேடுங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே!

(தொடரும்)



# புறநானூற்றின் ஆராய்ச்சி

[பண்டிதர் திரு ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.]

புறநானூறு என்பது சங்கப் புலவர்களால் அருளிச் செய்யப்பட்ட எட்டுத்தொகையுள் ஒன்று. பாரதம் பாடிய பெருந்தேவனார் முதல் கோவூர் கிழார் இறுதியாகவுள்ள புலவர் பலராற் பாடப்பெற்ற நானூறு அகவற்பாக்களை யுடையது. இதிலுள்ள பாக்கள் எல்லாம் தமிழுக்கே உரிய அகம் புறம் என்னும் பொருளிலக்கண வகையுள் புறப்பொருளிலக்கணத்தின் திணை துறைகளுக்கு இலக்கியமாக உள்ளவை. இந்நூற் செய்யுட்களிலிருந்து, பழைய நாளில் தமிழகத்திலிருந்து செங்கோலோச்சிய முடியுடைத் தமிழ் வேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்களில் பலருடைய வரலாறுகளையும், பாரி, பேகன், ஆய், அதிகன், காரி, ஓரி, நள்ளி, குமணன் முதலிய வரையா ஈகையினையுடைய வள்ளல்களின் வரலாறுகளையும், புலவர் வீரர் முதலானவர்களின் வரலாறுகளையும் அறிந்து கொள்ளலாகும். மற்றும், அரசரொழுக்கம், ஒற்றுமை, அன்பு, அருள், துறவு, வாய்மை, தவம்,கற்பு, நட்புமுதலிய எண்ணிறந்த அறங்களும், பண்புகளும் இவற்றிடை நன்கு விளங்கிக் கிடக்கின்றன. தமிழரின் வரலாறுகளையும், பழம் பெருமைகளையும், பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்ளுதற்குச் சிறந்தகருவியாகவுள்ள நூல்கள் எல்லாவற்றிலும் இது முதன்மையானது. இதனைப் பாடிய புலவர்களில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், எயினர், பொற்கொல்லர், நாகர், கூத்தர், பாணர் முதலிய பல வகுப்பினரும் இருக்கின்றனர். பாடிய பெண்பாலரும் பலராவர். தமிழ் மக்கள் இதனைப் படித்தலால் உயர்ந்த எண்ணங்களும் ஊக்கமும் உடையராவர் என்பதில் ஐயமில்லை. முதற்கண் இதிலுள்ள அரசாங்க ஒழுக்கத்தைப் புலப்படுத்தும் பகுதிகளை எடுத்துக் காட்டுதும். அரசர்பால் அமைந்துள்ள ஒழுக்கங்களைப் புலவர்கள் எடுத்துரைப்பனவும், அரசர்க்கு அவர் அறிவுறுத்துவனவும், அரசர்கள் தாமே கூறுவனவும் ஆகிய மூன்று வகையால் அரசாட்சி முறைகள் புலப்படுகின்றன.

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்ற சோழமன்னனைப் பாடிய ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் 'நீ நின்னை வழிபட்டு ஒழுகுவோரை விரைவில் அறிந்து கொள்வை, பிறர் குற்றங்களை எடுத்துத் தூற்றுவாருடைய மொழியை நம்பமாட்டாய், நீ மெய்யாக ஆராய்ந்து துணியப்பட்ட தீமையை ஒருவன்பாற் கண்டால் அதனை ஒழுக்கநூலோடு பொருந்த

ஆராய்ந்து அத்தீமைக்குத் தக ஒறுப்பாய், அங்ஙனம் தீமை புரிந்தோரும் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டு வந்து பணிந்து நிற்பரேல் முன்னையினும் அவர்மேல் அருள் மிகுந்து அவரை ஒறுக்காது விடுவாய்' என்று கூறுகின்றனர்.

"வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக வொறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதிநீ பண்டையிற் பெரிதே."

என்பது காண்க.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை என்னும் சேரமன்னனைப் பாடுகின்ற குறுங்கோழியூர் கிழார் என்னும் புலவர், 'தென்றிசைக்கண் குமரியும், வடதிசைக்கண் இமயமும், கீழ்த்திசையிலும் மேற்றிசையிலும் கடலும் எல்லையாக வுடைய நிலத்திலே குன்றும் மலையும் காடும் நாடும் உடையோர் அனைவரும் ஒரு பெற்றியே வழிபாடு கூறக், கொடுமையைப் போக்கிச், செங்கோன்மை பூண்டு, ஆறிலொன்றாகிய இறைகொண்டு, நடுவு நிலைமையைப் பொருந்தித், தடையின்றி உருண்ட ஆணைவட்டத்தால் நிலவுலகம் முழுவதையும் ஆண்டோருடைய மரபைக் காத்தவனே' என்கின்றனர்.

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலாவெல்லை
குன்றுமலை காடுநாடு
ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோல்திருத்திப்
படிவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல்."

என்பது அது.

மற்றும் அவர் அவ்வேந்தனைப் பிறிதோரிடத்தில், 'பெரிய கடலின் ஆழமும், அகன்ற உலகத்துப் பரப்பும், காற்று இயங்கும் திசையும், வடிவின்றி நிலைபெற்ற வானும் என்னும் இவற்றை அளந்தறியினும் நின் அறிவு அன்பு கண்ணோட்டம் என்பன வரையறுத்தற்கு அரியன ; ஆதலால் நின் குடைநிழலில் வாழ்வோர் சோறு சமைக்கும் நெருப்புடன் ஞாயிற்றின் வெம்மை யலல்து வேறு வெம்மை யறியார் ; 'இந்திர'வில் அல்லது பகைவரது கொலைவில்லை அறியார் ; கலப்பை அல்லது வேறு



படைக்கலமும் அறியார் ; என்று கூறுகின்றனர். அவ்வாய்மொழி பின்வருவது :

"இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்கு
அவையளந் தறியினும் அளத்தற் கரியை
அறிவும் ஈரமும் பெருங்கண் ணோட்டமும் ;
சோறு படுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார் நின்னிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையும் அறியார்."

இனிப் புலவர் அரசர்கட்கு அறிவுறுத்தும் ஒழுக்கங்களைப் பார்ப்போம். நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர் இரும்பொறை என்னும் சேரமன்னனைப் பார்த்து,

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
அளிதோ தானே யதுபெற லருங்குரைத்தே."

என்கின்றனர்.

இதன் பொருள் : 'அருளையும் அன்பையும் கைவிட்டு நரகத்தையே தமக்கு எப்பொழுதும் இடமாகக் கொள்ளும் தீயரோடு பொருந்தாது, நின்னாற் காக்கப்படும் நாட்டினைக் குழந்தையை வளர்ப்பார்போற் பேணிப் பாதுகாப்பாயாக, அங்ஙனம் காத்தல் யாவராலும் விரும்பத் தக்கதும், அருமை யுடையதும் ஆகும்' என்பது.

பாண்டியன் நெடுஞ் செழியனுக்குக் குடபுலவியனார் என்னும் புலவர் பின்வருமாறு அறிவுறுத்து கின்றனர். "கடல் சூழ்ந்த உலகம் முழுவதையும் தமது முயற்சியாற் கைக்கொண்டு புகழை உலகத்தில் நிறுத்தி ஆட்சிபுரிந்த வலியோருடைய வழியில் வந்தோனே ! நீ மறுமை யுலகத்தின்கண் நுகரும் செல்வத்தை விரும்பினும், ஏனை மன்னரை யெல்லாம் வென்று நீயே தலைவனாதலை விரும்பினும், நல்ல புகழை இவ்வுலகத்தே நிலைபெறுத்துதலை விரும்பினும் அதற்குத் தக்க செய்கையைக் கேட்பாயாக. உடம்புகளெல்லாம் உணவை நிலைக்களனாக வுடையன ; ஆதலின் நீரை இன்றியமையாத அவ்வுடம்புகட்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ; உணவெனப்படுவது நிலத்

தொடு நீரே; அந்நீரையும் நிலத்தையும் ஒருவழிக் கூட்டினவர்கள் இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் படைத்தவராவர்: விதையை விதைத்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் புன்புலம் எத்துணை இடமகன்றதாயினும் அது அரசனது முயற்சிக்குப் பயன்படாதது; ஆகலின் இவ் வுண்மையைக் கடைப்பிடித்து, ஏரி, குளம் முதலிய நீர்நிலைகள் மிகும்படி செய்தோரே மறுமைச் செல்வம் முதலிய மூன்றனையும் தம் பெயருடன் இவ்வுலகத்தில் இசையச் செய்தோ ராவர்."

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடுகின்ற வெள்ளைக்குடி நாயனார் என்னும் புலவர், 'கடல் சூழ்ந்த உலகத்தில் மேம்பாடுடைய தமிழ் நாட்டினைப் புரக்கும் மூவேந்தருள்ளும் அரசு என்று கூறப்படுதற்குச் சிறப்புடையது நின்னுடைய அரசே; ஞாயிறு நான்கு பக்கத்திலும் தோன்றினும், வெள்ளிமீன் தென் பக்கத்திற் சென்றாலும் காவிரியானது நீர் வற்றாது பல கால்களாய் வந்து ஊட்டுதலினாலே வேற் படையின் தொகுதி போலக் கரும்பினுடைய வெள்ளிய பூக்கள் அசைந்து கொண்டிருக்கும் நாடு என்று சொல்லப்படுவது நின்னுடைய நாடே; இங்ஙனமாகிய செல்வத்தை யுடைய வேந்தனே! நினக்குரிய சில கருத்துக்களைக் கூறுவேன், நான் சொல்பவற்றைக் கேட்பாயாக! அறக்கடவுளே இருந்து அரசு புரிந்தாற்போல் செங்கோன்மை யுடையாய், முறை கேட்க (நீதி கேட்க) வேண்டுங் காலத்துக் காண்பதற்கு எளியசமயமு முடையாகும் மன்னர், மழைவேண்டுங்காலத்துப் பெய்யப்பெற்றோ ராவார்; நினது வெண் கொற்றக் குடையானது வெயிலைமறைப்பதற்குக் கொண்டதோ வெனின் அன்று; அது, வருத்தமுற்ற குடிகளுக்கு நிழல் செய்வதற்காகக் கொள்ளப்பட்டது; போர்க்களத்தில் மாற்றாருடைய படையைப் புறங் கண்டு நின்படை நினக்குத் தருகின்ற வெற்றியும் கலப்பை யுழுத படைச்சாலில் விளைந்த நெல்லினது பயனே; மழை பெய்யுங் காலத்துப் பெய்யா தொழியினும், விளைவு குறையினும், உலகிலே தீய செயல்கள் நிகழினும் உலகத்தோர் காவலரைப் பழித்துரைப்பர்; நீ, அதனை நன்கு அறிந்தனையாயின் குறளை கூறுவாருடைய உறுதியில்லாத மொழிகளை ஏற்றுக் கொள்ளாமல், உழு தொழில் செய்வாரது குடியைப் பாதுகாத்து, அதனாலே ஏனைக் குடிகளையும் காப்பா யாயின், நின் பகைவரும் நின் அடியைப் போற்றுவர்? என்று அழகுபெறக் கூறியுள்ளார். அது,

"அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதிற் பெயல் பெற்றோரே;



கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடி மறைப்பதுவே கூர்வேல் வளவ;
வருபடை தாங்கிப் போர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே;
வாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கையல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக் கண்ணகல் ஞாலம்;
அதுநன் கறிந்தனை யாயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடு புறந்தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்நின்
அடிபுறந் தருகுவர் அடங்காதோரே."

என்பது.

இனி, இலவந்திப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்னும் பாண்டியனைப் பாடுகின்ற மருதன் இளநாகனார் என்னும் புலவர், சிவபெருமானது மூன்று கண்களில் நெற்றியில் விளங்கும் ஒரு கண்போல வேந்தர்களில் மேம்பட்ட மாறனே! யானை, குதிரை, தேர், காலாள் என்கிற நான்கு படையும் மாட்சிமைப்பட்டனவாயினும் அரசரது வெற்றியானது சிறந்த அறநெறியை முதலாக வுடையது; அதனால், இவர் நம்முடையரென அவர் செய்யும் கொடுந் தொழிலைப் பொறுத்துக் கோல் வளையாமலும், இவர் நமக்கு அயலாரென்று அவர் இனிய பண்புகளை வெறுத்தொதுக்காமலும், ஞாயிறு போன்ற வீரமும், திங்கள் போன்ற தண்ணளியும், மேகம் போன்ற வண்மையும் உடையையாகி நினது நாட்டில் வறிஞர் என்போர் இல்லையாக நீ நெடுங்காலம் வாழ்வாயாக, என்று கூறியுள்ளார்.

"கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடையபுகல் மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்;
அதனால், நமரெனக் கோல் கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி இல்லோர் கையற
நீ, நீடு வாழிய நெடுந்தகை."

என்பது அது.

அறிவுடை நம்பி என்னும் பாண்டி வேந்தனிடம் பிசிராந்தையார் என்னும் புலவர் பெருந்தகை கூறும் அறிவு மொழிகள் மிகவும் போற்றற் பாலன. அவர், 'யானைக்கு விளைந்த நெல்லை யறுத்துக் கவளமாகக் கொடுத்தால் ஒரு மாவிற் குறைந்த நிலத்தில் விளைந்த கதிரும் பல நாளைக்கு ஆகும்; நூறு செய் யாயினும் யானை தனித்துப் புக்கு உண்ணுமாயின் அதன் வாயிற் புகுவதைக் காட்டிலும் காலால் அழிவது மிகுதியாகும். அவ்வாறே அறிவுடைய அரசன் இறைப்பொருள் கொள்ளும் நெறியை அறிந்து கொண்டால் அவனது நாடு கோடி பொருளைத் தேடிக் கொடுத்து, தானும் மிகவுந் தழைக்கும்; வேந்தன் அறிவு குறைந்தவனாகி, நிலையறிந்து உறுதி கூறாமல் அவன் விரும்புவதனையே கூறும் வெறும் ஆரவாரத்தை யுடைய அமைச்சர் முதலானவரோடு கூடி அன்பின்றிக் கொள்ளும் பொருளை விரும்புவானாயின் அந்த யானை புகுந்த விளைநிலம்போலத் தானும் உண்ணப் பெறான்; உலகமும் கெடும்' என்கின்றனர். பின்வருவது அவர் வாய்மொழி.

> " காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
> மாநிறை வில்லதும் பன்னாட் காகும்;
> நூறுசெறு வாயினும் தமித்துப் புக்குணினே
> வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
> அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
> கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
> மெல்லியன் கிழவனாகி வைகலும்
> வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
> பரிவு தபவெடுக்கும் பிண்டம் நச்சின்
> யானை புக்க புலம் போலத்
> தானும் உண்ணான்; உலகமும் கெடுமே."

மோசி கீரனார் என்னும் புலவர் 'இவ்வுலக மானது வேந்தனாகிய உயிரை உடையது. அதனால் இவ் வுலகத்தார்க்கு நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, யானே உயிரென அறிதல் படையினையுடைய அரசனுக்குக் கடன்' என்கின்றார். அது,

> " நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
> மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
> அதனால், யானுயிரென்ப தறிகை
> வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே."

என்பது.

இவ்வாறு அரசர்களை நெருங்கிப் பலதிறப்பட்ட ஒழுக்கங்களையும் எடுத்து இடித்துரைக்கும் புலவர்களின் பெருமையை யாரால் எடுத்தியம்ப லாகும்? அரசராயினாரும்,



> " இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பாரி லானுங் கெடும்."

என்னும் முதுமொழியை யுணர்ந்து, புலவர்கள் தம்மை நெருங்கி அறிவு கொளுத்துதற்கு இணங்கியும், அவர்கள் கூறும் அறிவுரைகளால் திருந்தியும் வந்தனர்.

இனிப் புலவர் முதலாயினார் ஒழுக்கங் கூறுவதை விட அவ்வரசர்கள் தாமே கூறும் வாய்மொழியி லிருந்து அவர்கள் ஒழுக்கத்தில் எவ்வளவு கருத்துடையரா யிருந்தனர் என அறிந்து கொள்வது உறுதி யுடைத்தாகும். ஒல்லையூர்தந்த பூதப் பாண்டியன் என்னும் மன்னன் பகையரசர் பலர் ஒருங்கு சேர்ந்து போருக்கு வந்தவிடத்து வஞ்சினங் கூறுகின்றான். அவன் வஞ்சினமாகக் கூறும் வாய்மொழிகளில் அவனது ஒழுக்கத்தைப் புலப்படுத்தும் பகுதியை மட்டும் இங்கே நோக்குவோம். 'சிங்கம் போற் சினந்து அடங்காத சேனையையுடைய மன்னர் பலர் சேர்ந்து என்னோடு போர் செய்வோம் என்று சொல்லுவர். அவரைப் போரின்கண் அலறும்படியாகப் பொருது தேருடன் புறங்காட்டி யோடச் செய்யேனாயின், அறம் நிலைதிரியாத அன்பினை யுடைய அவைக்களத்தில் அறத்தின் தன்மையை அறியாத ஒருவனை ஏற்படுத்தி முறைதவறிக் கொடுங்கோல் செய்தேன் ஆகுக' என்று கூறுகின்றான்.

> " ஆரம ரலறத் தாக்கித் தேரொடு
> அவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
> அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
> மெலிகோல் செய்தே னாகுக."

என்பது அவன் வாய்மொழி.

இதிலிருந்து அக்காலத்துத் தமிழ் வேந்தர்கள் ஆட்சி நடத்துதற்கு அரசவை அமைத்துக் கொண்டிருந்தன ரென்பதும், அவ்வவையில் அறம் நிலைதிரியாதிருந்த தென்பதும் விளங்குகின்றன. அன்றியும் அரசவையில் அறத்தின் கூறுபாட்டை யறியாத ஒருவனை ஏற்படுத்துதலினாலேயே ஒழுக்கத்திற் பிறழ்ச்சி யுண்டாகு மென்பதையும், அதைப் பார்க்கிலும் தனக்கு இழிவு வேறில்லை யென்பதையும் அம்மன்னன் நன்கு உணர்ந்துள்ளமையும் புலனாகின்றது.

இனித் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினங் கூறுமிடத்து, 'எனது ஆண்மையை மதியாமல் சிறுமொழி கூறிய பகை வேந்தர்களைப் போரின்கண் சிதறும்படி

பொருது, முரசத்தோடு அவர்களைக் கைப்பற்றேனாயின், என் குடை நிழலில் வாழும் குடிமக்கள், எனது கொடுங் கோன்மையால் வருந்தித் தாங்கள் சென்றடையும் நிழல் காணாமல் எம்முடைய வேந்தன் மிகவும் கொடியன் என்று கண்ணீர் விடுத்துப் பழிதூற்றும் தன்மை யுடையேனாகுக' என்கின்றான். பின்வருவது அது,

" சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியன்எம் மிறையெனக் கண்ணீர்ப் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேனாகுக."

இதிலிருந்து, குடிகள் வருத்தமுற்றுப் பழி தூற்றுதலை இம்மன்னன் எவ்வளவு வெறுத்திருக்கின்றான் என்பது புலனாகும். இவ்வேந்தனது ஆட்சியிலும் குடிகளுக்கு ஏதேனும் துன்பமுண்டாயிருத்தல் கூடுமோ? உண்டாயின் அதனை இவ்வேந்தர் பெருமான் பொறுத்திருத்தல் கூடுமோ? இங்ஙனம் தாயொக்கும் அன்புடன் குடிகளைப் புரந்துவரும் மன்னரது பெருமைக்கும் ஓர் எல்லையுண்டோ?

இனிக் காஞ்சி நகரத்திலிருந்து அரசுபுரிந்த தொண்டைமான் இளந்திரையன் என்னும் வேந்தன் 'அரசாட்சியாகிய வண்டியை நடாத்துகின்றவன் மாட்சிமை யுடையனாயின் அது இடையூறின்றி இனிதாக நடக்கும்; அவன் அதனை இனிதாகச் செலுத்த அறியானாயின் அந்த வண்டியானது எப்பொழுதும் பகையாகிய சேற்றிலே அகப்பட்டு மிகப்பலவாய துன்பத்தை மேன்மே லுண்டாக்கும்' என்று கூறுகின்றான். பின்வருவது அவன் கூறிய பாட்டு,

" கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்;
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறின் றாகி ஆறினிது படுமே;
உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே."

சோழன் கிள்ளிவளவனை மாறோகத்து நப்பசலையார் பாடிய பாட்டில் 'கேடின்றி மறம் பொருந்திய சோழனது உறையூரிலேயுள்ள அவைக்களத்து அறம் நின்று நிலைபெற்றது. ஆதலால் முறைசெலுத்தல் என்பது நினக்கு இயற்கையன்றிப் புகழுமாகாது' என்கின்றார்.



" மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற் றாகலி னதனால்
முறைமைநின் புகழு மன்றே."

இவ்வாறே "அறங்கெழு நல்லவை யுறந்தை யன்ன" என்று வேறு நூலிலும் கூறப்படுகிறது. இவ்வாற்றால் தமிழ்நாட்டு வேந்தர் யாவரும் அறநெறி தவறாத அரசவை அமைத்து ஆட்சி நடாத்தினமை இனிது புலனாகும்.

இனி, அரசியல் நடாத்துதற்கண் அன்றி உலகப் பொது வாழ்விலும் அக்காலத்துத் தமிழ் வேந்தர்கள் மிக விரிந்த மனநிலை யடைந்திருந்தனரென அவர்கள் வாய்மொழியாலேயே விளங்குகிறது. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பாண்டி வேந்தன் கூறியதொரு பாட்டு பொன் னெழுத்தாற் பதித்து ஒவ்வொருவரும் போற்றவேண்டியதாகும். அது,

" உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமிய ருண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே."

என்பது.

இப்பாட்டின் பொருள், 'இவ்வுலகம் உளதாகா நின்றது யார் இருத்தலால் எனில், இந்திரர்க்குரிய அமிழ்தமானது தெய்வத்தாலோ தவத்தாலோ அருமையாகத் தமக்குக் கிடைப்பதாயினும் அதனை இனிதென்று தனித்து உண்டலும் இலர்; யாரோடும் வெறுப்பின்றி யிருப்பர்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அதனைத் தீர்க்காது மடிந்திருத்தலொல்லார்; மெய்யான புகழின் பொருட்டுத் தம் உயிரையும் கொடுப்பர்; பழி வருவதாயின் அதனால் உலகம் முழுதும் கிடைப்பினும் ஏற்றுக்கொள்ளார், எத்தகைய துன்பத்திற்கும் மனங்கவலார், தாம் இடைவிடாது செய்யும் வலிய முயற்சியெல்லாம் தம்பொருட்டாக வன்றிப் பிறர் பொருட்டாகவே செய்வர், இப்பெற்றியுடைய மாண்புடையோர் இருத்தலால்தான் என்க என்பது.

# மார்கழித் திருவாதிரை விளக்கம்

[திரு. வீ. குமாரவேலுப்பிள்ளையவர்கள்]

**இறைவன் இயற்றுந் தொழில் ஐந்து :**—கடவுள் உயிர்கள் ஈடேறும் பொருட்டு உலகு உடல் உறுப்பு முதலியவற்றைப் படைத்தருள்கின்றனர், அத்தொழிலைப் படைத்தற்றொழில் எனப்பகர்வர். பின்னர் படைத்த பொருள்களைச் சிறிதுகாலம் நிலைபெறச் செய்கின்றனர். அதனைக் காத்தற்றொழில் எனக் கழறுவர். அதன் பின்னர் ஒரு கால வெல்லையில் அழித்துவிடுகின்றனர். அதனை அழித்தற்றொழில் என அறைவர். உயிர்கட்கு உடம்பைப் படைத்துக் காத்துக் கொடுத்தால் மட்டும் போதாது. ஏன்? தூங்குகின்ற ஒருவனுக்குக் காது முதலிய உடலின் உறுப்புக்கள் இருந்தும் பயன்படவில்லை. ஆகவே, இறைவன் உயிர்களை அவ்வவற்றின் வினைக்கீடான உடம்புகளிற் சேர்த்து வினைப்பயன்களை ஊட்டுகின்றார். இதனை மறைத்தற்றொழில் என்பர். பின்னர் வினைப்பயன் நுகர்ச்சியில் உயிர்களுக்கு வெறுப்புத் தோன்றிய காலத்துக் கட்டறுத்து வீடுபேறு அருளுவர். அதனை ஆன்றோர் அருளல் என அறைவர். இங்ஙனம் இறைவன் இயற்றுந் தொழில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தாம்.

**தொழில் மூன்று :**—மேற்காட்டப்பட்ட தொழில் ஐந்தனுள் அருளல் கட்டறுத்தல் ஆகலின் அதனை அழித்தற்றொழிலுள் அடக்குவர். மறைத்தல் என்பது வினைப்பயன் நுகருமாறு உயிரை உடலுடன் சேர்த்து நிலைபெறுத்துதல் ஆகலின் அதனை நிலைபெறுத்தற்றொழிலாகிய காத்தலில் அடக்குவர். இங்ஙனம் மறைத்தல் அருளல்களை முறையே காத்தலினும் அழித்தலினும் அடக்கிப் படைத்தல், காத்தல், அழித்தல் எனத் தொழில் மூன்றெனவும் கூறுவர்.

**தொழில் இரண்டு:**—மேலும் மேற்சொல்லப்பட்ட தொழில்களெல்லாம் உயிரடையும் பயனைவைத் தாராயும்போது உயிர்களை உலகவாழ்வில் அழுந்துவித்தல், வீடுபேறுஅருளல் என்னும் இரண்டனுள் அடங்கும். ஆகவே, இறைவன் இயற்றுந்தொழில் மறைத்தல், அருளல் என இரண்டெனவும் இயம்புவர்.

**இறைவன் தொழில் உயிர்கள் ஈடேறும் பொருட்டாம் :**—மேற்காட்டப்பட்ட தொழில்களெல்லாம் இறைவன் உயிர்களின் பொருட்டே இயற்றுகின்றான். உயிர்கள் எண்ணிறந்தன. எண்



றும் உள்ளன. இயல்பாகவே மலச்சார்பு உடையன. உயிர்களை மலக்கட்டினின்றும் நீக்கிப் பேரின்பம் அருளுதற்பொருட்டே ஐந்தொழிலும் நடைபெறுகின்றன. மலச்சார்பின் நீங்கி வீடுபேறெய்திய உயிர்க்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. மலப்பற்றுடைய உயிர்களே மீளவும் மீளவும் பிறந்து இருந்து இறந்து உழல்கின்றன. இம்மலப்பற்றுடைய உயிர்களின் பொருட்டே இறைவனும் மீண்டும் மீண்டும் படைத்தல், காத்தல், அழித்தலாகிய தொழில்களைச் செய்துகொண்டேயிருக்கின்றான்.

**உண்மைகளை நூற்பாக்களில் அமைத்துக் காட்டல் :**—மேற்காட்டிய உண்மைகளையெல்லாம் ஆன்றோர் தம் அறிவிற்கண்டனர், இன்புற்றனர். தாம் பெற்ற இன்பம் உலகம் பெற்று இன்புறக் கருதினர். கருதிப் பிறர் அவ்வுண்மைகளைக் கண்டறிந்து உய்யும்படி விளக்கிக் காட்டினர். எப்படி? சில்வகையெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனே செறித்துக்காட்டவல்ல நூற்பாக்களில் அமைத்து விளக்கினர். கல்வியறிவுடையோரெல்லாம் அவற்றைக் கற்று உண்மை கண்டின்புற்றனர்.

**உண்மைகளை உருவங்களில் அமைத்துக் காட்டல் :**—கற்றோரும் மற்றோரும் உணர்ந்து உய்யுமாறு ஆன்றோர் வேறோராற்றானும் உண்மைகளை வெளிப்படுத்தினர். எவ்வாற்றான்? ஒருநாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாற்கு ஒரு திருவுருவம் அமைத்தனர். அத்திருவுருவத்தின் ஒரு கையில் ஒருடுக்கு அமைத்தனர். அது படைத்தற்றொழிலை உணர்த்தும். அமைத்தற் குறிப்போடு கூடிய கை காத்தற்றொழிலை உணர்த்தும். வேறொரு கையில் தீயை அமைத்தனர். அது அழித்தற்றொழிலை உணர்த்தும். முயலகனை மிதித்து நிற்கிற திருவடி மலத்தோடு கூடிய உயிர்களை உலக வாழ்வில் அழுத்துதலை உணர்த்தும். தூக்கிய திருவடி உலக வாழ்வை வெறுத்த உயிர்களுக்கு வீடுபேற்றின்பம் அருளுதலை உணர்த்தும். இங்ஙனம் 'இறைவன் ஐந்தொழிற்கும் முதல்வன்' என்பதை இன்பக்கூத்தர் திருவுருவத்தால் நன்கு விளக்கிக் காட்டினர்.

**திருவுருவில் கடவுட்கு வழிபாடாற்றல் :**—கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர்; பேரருள் உடையர். ஆகவே, எவரெவர் எவ்வெவ்வுருவிற் கடவுளை வழிபடினும் அவ்வவ்வுருவினின்றும் வழிபட்டோர்க்கு அருள்புரிவர். ஆகலின் தாங்கள் உண்மைகளை உணர்த்த அமைத்த திருவுருவங்களைத் திருக்கோயில்களில் அமைத்து வைத்து அனைவரும் வழிபாடுசெய்து அருள்பெற்று உய்யும் வழியையும் காட்டினர்.

**திருவிழாக்கள்** :—இன்னும் திருக்கோயில்களில் திருவிழாக்களும் நடைபெறச் செய்தனர். ஒவ்வொரு திருவிழாவும் ஒவ்வோருண்மையினை உணர்த்தும்: அல்லது இறைவன் அடியார்களுக்கு அருள் செய்த திறத்திலொன்றை உணர்த்தும். இங்ஙனம் நடைபெறும் திருவிழாக்களில் ஒன்றாகும் மார்கழித் திருவாதிரையும்.

**மார்கழி என்பது ஒடுக்கம் நீங்கும் காலம்** :—மா - மாய்தல், அழிதல். அஃதாவது ஒடுக்கம்: கழி - கழிதல், அஃதாவது நீங்குதல். மா கழி என்பது இடையில் ரகர வொற்றுப்பெற்று மார்கழி என்றாயிற்று; கோத்தல் என்பது கோர்த்தல் என்றாவதுபோல. இஃது இறைவன் அழித்தற் றொழிலைச் செய்த பின்னர் மீளத் தோற்றுவிக்கும் காலத்தை உணர்த்தும்.

**திருவாதிரை என்பது உயிர்களை உலகவாழ்வில் அழுத்துதல்**:—திருவாதிரை என்பதில் திரு என்பது சிறப்புப் பொருளைத்தரும் ஓரடைமொழி. ஆ - உயிர். திரை - மறைத்தல். அஃதாவது உயிர்களை உலக வாழ்வில் அழுந்துவித்தல். இஃது இறைவன் உயிர்கள் பொருட்டுச் செய்யும் தொழில் இரண்டனுள் கட்டுறுத்தலாகிய மறைத்தற்றொழிலை உணர்த்தும்.

**திருவாதிரைத் திருவிழா நடைபெறும் முறை** :—மார்கழித் திருவாதிரைத் திருவிழா என்பது ஒடுக்க நீக்கத்தில் மலப்பற்றறாத உயிர்களை மீளவும் உலக வாழ்வில் அழுத்துதலை உணர்த்தும் திருவிழா என்பதாம். இத் திருவிழா நடைபெறும் நாள் திருவாதிரை நாள் எனப்படும். அத்திருநாளில் 'இறைவன் ஐந்தொழிற்கும் முதல்வன்' என்பதை உணர்த்தும் வகை அமைக்கப்பட்ட திருவுருவத்தோடு எழுந்தருளிய இன்பக்கூத்தர் திருமுன்பு ஓர் ஆன் நிறுத்தப்படும். அஃது இறைவன் மீளவும் படைத்தல் உயிர்கள் பொருட்டு என்பதை உணர்த்தும். நிறுத்தப்படும் ஆன் காராநுக இருக்கும்; அஃது இருள் போன்ற மலப்பற்றுடைய உயிர்களின்பொருட்டு என்பதைக் குறிக்கும். மேலும் அக் காரான் இன்பக்கூத்தர் திருமுன்பு திருவுருவத்தை நோக்கி நிற்குமாறு நிறுத்தப்படாமல் பின்னங்காட்டி நிறுத்தப்படுகிறது. அது திருவடியின்பத்தை விரும்பாமல் உலக இன்பத்தையே விரும்பும் உயிர்களின் பொருட்டு என்பதைக் குறிக்கும். அன்று இறைவன் அருளிய அருட்பேறாகக் களிறச்சாந்து அளிக்கப்படும். அஃது இறைவன் உயிர்கட்கு மலச்சார்பாகிய உலக வாழ்வை அருளுகின்றனர் என்பதைக் காட்டும்.



ஒடுங்கிக்கிடந்த உயிர்கட்குப் படைப்புத் தொடங்குதல் களிப்பைத் தருவது ஒன்றாகலின் அன்று களியும் வழங்கப்படும்.

**மார்கழித் திங்கள் திருப்பள்ளியெழுச்சிக் காலம்** :—இத் திருவிழா நடைபெறும் நாள் திருவாதிரை நாள் எனப்படும். இத் திருவிழா நடைபெறும் திங்கள் மார்கழித் திங்கள் எனப்படும். மார்கழி என்பது ஒடுக்கம் நீங்கும் காலத்தைக் குறிக்கிறது. ஒடுக்கம் நீங்கும் காலம் பள்ளியெழுச்சிக் காலம். ஆதலால் மார்கழித் திங்கள் திருப்பள்ளியெழுச்சிக் காலம் என்று சொல்லப்படும்.

**உலக வாழ்வை அருள்வது இறைவனது 'ஆதி' வன்மை** :—இறைவன் நம்மனோர்போலக் கை முதலிய உறுப்புக்களால் தொழில் செய்வான் அல்லன். அவன் ஆணை வழி உலகு நடைபெறும். அவ்வாணை அவனது அறிவாற்றலாகும். உலகவாழ்வில் உயிர்களை அழுத்தும் இறைவனது அறிவாற்றல் 'ஆதி' வன்மை என்றழைக்கப்பெறும். 'ஆதி' என்பதில் ஆ - உயிர். தி-மறைத்தற் பொருளைத் தரும் திரை என்பதன் முதலெழுத்து. ஆகவே 'ஆதி' வன்மை என்பது உயிர்களை உலக வாழ்வில் அழுத்தி மறைத்தற் றொழிலைச் செய்யும் வன்மை எனப் பொருள்படும். இங்ஙனம் ஒரு சொல்லின் முதலெழுத்தை மட்டும் எடுத்துக் கொள்வதைத் திருவைந்தெழுத்தில் காணலாம். திருவைந்தெழுத்து வெவ்வேறு பொருளைக் குறிக்கும் வெவ்வேறு சொற்களின் முதலெழுத்துக்களின் தொகுதியாம்.

இவ் ஆதி வன்மையே உயிர்கட்கு உலக வாழ்வை அருள்வதாம். இது பற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என்று அருளிச் செய்வாராயினர். 'ஆதி பகவன்' என்பதன் பொருள் 'ஆதி' வன்மையாகிய தாயைத் (அம்மையை) தன்னுருவில் ஒரு பகுதியாக உடையவன் என்பதாம். 'ஆதிரையான்' என்னும் பெயரும் ஆதி பகவனைக் குறிப்பதே. முற்காலத்தில் ஆத்திரையன் என்னும் பெயர் அப்பொருளைக் குறித்தது. ஆத்திரையன் பேராசிரியன் என்னும் பெயரை நோக்குக. அது பற்றியே 'ஆத்தி' மலர் இறைவனுக்குச் சூடுதற்குரிய அடையாள மலராயிற்று.

**சிவந்தி மலர் சாத்தல்** :—திருவாதிரை நாளன்று எம்பெருமான் சிவந்தி மலர்களால் அழகு செய்யப்படுகின்றான். 'சிவந்தி' என்பதில் 'சிவம்' என்பது இறைவனைக் குறிக்கிறது: 'தி' என்பது மறைத்தற் றொழிலையுணர்த்தும் திரை என்பதன் முதலெழுத்து. இங்ஙனம் ஆகலின் சிவந்தி மலர் திருவாதிரை

நாளன்று இறைவனுக்குச் சாத்துதற்குரிய அடையாள மலராயிற்று. மேலும் திருவாதிரைத் திருவிழா ஒடுக்கம் நீங்கிய காலத்துப் படைத்தற் றொழிலைக் குறிப்பதாம். என்னை? மறைத்தற் றொழிலுள் அடங்கிய படைத்தல் காத்தல் இரண்டனுள் முதற்கண் நிகழ்வது படைத்தலாமாகலின். படைப்போன் 'பொன்னன்' எனப்படுவான். ஆகவே, படைக்கும் வன்மையைக் குறிக்கும் நிறம் பொன்னிறமாம். ஆகலான் அன்று எம்பெருமான் பொன்னிறப் பூக்களாகிய சிவந்தி மலர்களால் அழகு செய்யப்படுகின்றான் என்றலும் அமையும்.

இங்ஙனம் பொன்னிறமாகிய மஞ்சள் படைக்கும் வன்மையை உணர்த்துகின்றது. ஆகலின் எந்த நற்செயல் தொடங்கும் பொழுதும் தமிழ் நன்மக்கள் 'ஆதி' வன்மையை வழிபடுதல் குறித்து மஞ்சள் வைத்துக்கொள்கின்றனர்.

**மார்கழித் திங்களில் முற்றத்தில் பூ வைத்தல்:**—திருப்பள்ளியெழுச்சிக் காலமாவது எம்பெருமானுடைய படைக்கும் வன்மை உயிர்களைப்பற்றியுள்ள மலத்தைத் தொழிற்படுத்தி உயிர்கட்கு உலகவாழ்வை அருளும் காலமாம். ஆகவே நமது பெண்மக்கள் தங்கள் தங்கள் வீடுகளின் முற்றத்தில் திருப்பள்ளியெழுச்சிக் காலமாகிய மார்கழித் திங்கள் முழுவதும் ஆனின் மலத்தை உருட்டி வைத்து அதில் பொன்னிறப் பூவாகிய பூசனிப்பூவை நாட்டிவைத்து 'ஆதி' வன்மையை வழிபடுகின்றனர். பொன்னிறப்பூ படைக்கும் வன்மையை உணர்த்தும்.

---

# காழிக்கண்ணுடைய வள்ளலார்

[திரு. அ. ப. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்]

(முன் ௬௭௰-ம் பக்கத் தொடர்ச்சி)

குதர்க்கவாதம் நாடெங்கும் நடைபெற்றது. மதச்சண்டை யாவரும் சம்மதத்தோடு கேட்கத்தக்க மதச் சண்டையாயிராமல் மதச் சண்டையாக இருந்தது. மடாலயங்களில் அவ்வம் மடங்களின் பத்ததிகளின்படி காரியங்கள் நடைபெறுவண்ணம் தடைகள் ஏற்பட்டன. மடாதிபதிகளும் ஒவ் வோரினத்தின [illegible] சார்பில் வைத்துக்கொண்டு அவ்வச் சார்பிற்கேற்ற [illegible] கருத்துடையவராக இருந்து காலத்தைக் கழித்து வந்தனர். மடாலயங்களில் க்ஷேமித்து வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் சூறையாடப்பட்டன. நூதன கிரந்தங்கள் எழுதப்பட்டன. சீகாழியில் திருஞான சம்பந்தராலயத்து இருந்த திருமுறைக் கோசமும் மங்கையர்க் கரசியார் திருவுருவமும் காணமற்போயின. காப்பியக்குடி சிவாலயத்து இருந்த திரணதூமாக்கினி விக்கிரகம் பக்கத்துள்ள குளத்தில் பதுக்கிவைக்கப்பட்டது. (இன்னும் அதனை எடுத்துப் பிரதிஷ்டை செய்வாரில்லை). பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்துச் சிதைந்துபோன ஸ்ரீகோசங்களைத் தேடி அமைக்கப் பிள்ளை லோகாசாரியரேனும் பிறந்தார். இவ் வராஜக காலத்துப் பதிமுதல் செய்யப்பட்ட கிரந்தங்களுக்கு அளவில்லையாதலால், இவற்றின் தாற்பரியங்களையேனும் சங்கிரகித்து எழுத எச்சாமி உதயமாகுமோ என்று உண்மையன்பர்கள் பரிதபிக்கலாயினர். எந்தச் சாதியிற் பிறந்தார்க்கும் தெய்வ சிந்தனையுண்டு, அவர் சாதிக்கேற்ற மதிப்புண்டு, தகுதியுண்டு, அவற்றை மறந்து ஒவ்வொருவரும் தாமே மேலோர், தமக்கே சமய சம்ஸ்காரங்கள் யாவும் வேண்டும். இதொருக்கில்லை, யாமே ஆசாரிய பரம்பரையினர் எமக்கே சந்நியாசம் உண்டு எனப் பலவாறு பல போலி வேடமுங் கொள்ளலாயினர். மேல்வரம்பு கீழ்வரம்பு அற்றது, தான்றோன்றிகள் மிகுந்தனர். போலிச் சமயிகள் பொலிந்தனர்.

இவ்வாறு பலவகைக் கலகமுஞ் சச்சரவும் நடந்து வருந்தறுவாயில், அதிருஷ்ட வசத்தால் போர்த்துகேசிரியர் தானியர் உலாந்தர் பிரஞ்சுக்காரர் ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பியர் நமது தேசத்தில் வியாபார சங்கத்தாராகப் பிரவேசித்தனர். அவர்களோடு நம்மவர் நாணயத்தோடு பழகவேண்டி வந்தது. அன்னார் பொருட் காவலுக்குச் சிறுபடை வைத்துக்கொண்டிருந்தார்கள். அப்படைகளைக் கண்டஞ்சி இக் கலகக்காரர் சமாதானத்தோடு வாழ்ந்து வந்தனர். இவர்கள் செய்துவந்த அட்டூழியங்கள் குறைந்தன. மதுரைச் சீமையில் சிவலமாறனுக்குப் பின் இரகுநாதரும், அவருக்குப் பின் பிரசித்திபெற்ற தேவநேசராகிய திருமலை பூபதியும், சேது ஸம்ஸ்தானத்தில் சமாதானப் பிரியரும் ஆரியர் மானங் காத்தோருமாகிய சடைக்கதேவரும் அவர் பின்னோரும், தஞ்சாவூர் வெங்காஜி என்னும் மஹாராஷ்டிர மன்னரும் ஆட்சி புரிந்து இக்குழப்பங்களை அடக்கி வந்தனர். வீண் சமயம் போராட்டங்களை ஒழித்தனர். இவர்களுள் வெங்காஜிவேந்தர் மஹாராஷ்டிர கவிஞானியாகிய துக்கராம்பாவா அவர்கள் கவிகளையும் ஞான சீலத்தையும் கண்டும் கேட்டும் உணர்ந்தவரானபடியால் சோழ நாட்டில் மமலய தருமங்களைத் திரும்பச் சிறப்பாக நடத்துவிக்கும்படி கட்டளையிட்

டார். தருமபுர வாதீனத்தில் மாசிலாமணி தேசிகரும் குமரகுரு சுவாமிகளும் சம்பந்த சரணுலயரும் படிக்காசு வைத்த முனிவரும் வெள்ளியம்பல வாணரும், துறை மங்கலத்தில் சிவப்பிரகாச சுவாமிகளும் சாந்தலிங்க சுவாமிகளும் சிதம்பர சுவாமிகளும், திருவாவடுதுறை யாதீனத்தில் எட்டாவது பட்டத்தில் மாசிலாமணித் தேசிகரும் அவர் காலத்துத் திரிதீய பட்டத்தில் சுவாமிநாத தேசிகரும் ஞான சிங்கங்களாக எழுந்தருளி விளங்கினுர்கள். காஞ்சீபுரத்துக் காமகோடி பீடாதிபர்களான சங்கராசாரிய சுவாமிகள் ஒருவர் கும்பகோணத்தில் திருமடம் ஒன்றில் அமர்ந்தருளினுர்கள். மற்றும் ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களையும் சிங்காச ஞதிபதிகளையும் பற்றி இங்கு யான் கூறவேயில்லை, அவர்களைப் பற்றிய ஆராய்ச்சி மிகப் பெரியதாதலால். இப் பெரியார்கள் முன்னிலையில் எவரும் குதர்க்கவாதம் பேசுதலை ஒழித்தனர். சோழமண்டல முழுவதும் ஒருவாறு சாந்திநிலை அடைந்தது. வேதாந்தம் சித்தாந்தம் சுத்த சைவம் வீரசைவம் ஆகிய இந்நான்கு உத்தம நெறிகளையும் மேற்கூறிய தலைவர்கள் தங்கள் உரிமைகளின்படியே காத்துக்கொண்டனர். எனினும் இக் கொள்கைகளின் திரண்ட பொருள் யாது? இவற்றுட் பேதப்படாது வாழும் மெய்ந்நிலை யாது? என்று உற்று விசாரிக்கும் பேரவா யாவர்க்கும் எழும்பியது. சிவாநுபவமே உண்மை ஞானம், அவ்வுண்மை ஞானம் இன்னபடித்து ஆம், அப்படியின் நின்ருர்க்குச் சமரச சுபாவம் தலைப்படும். அச் சுபாவமே பழம் பொருளை யுணர்ந்தாலன்றிச் சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானம் ஒழியாது, அவ்வபிமானம் ஒழிவி லொடுக்கத்தாலன்றி நீங்காது என்று உணர்த்தவல்ல பெருந்தகையா ரொருவர் இச்சமயத்துத் திருவவதரித்தனர். சந்திரன் திருப்பாற்கடலி னுதிப்பனே யன்றிப் பிறிதோரிடத்து உதிப்பானே, ஆதித்தன் உதயகிரியிற் ருேன்றுவானே யன்றிப் பிறிதோரிடத்துத் தோன்றுவானே? அங்ஙனமே நமது பிரபோத சந்திரன் ஞான சூரியன் தவமுற்றிய பெருந்தகையாளர் மக்கள் முறையின் நாட்டிய காழிக் கிரியாசார பாம்பரை யொன்றில் திருவவதாரஞ் செய்தார்.

(தொடரும்)



# தமிழர் முன்னேற்றம்

[திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எம்.ஏ., எம்.எல்.,]

தமிழரென்பார், தமிழைத் தாய் மொழியாக உடையவர் யாவரும் ஆவர் ஆயினும், தமிழ் மொழி தனி மொழி யென்ற கொள்கையும், தமிழர் பண்டைக்காலத்திலேயே உயர்ந்த நாகரீகமுற்ற மரபினருள் ஒரு மரபினரென்ற கொள்கையும் இல்லாதவர்களைத் தமிழரென்று கூறுதல் தக்க தன்று. இந்நாட்டிலே தமிழர் ஆரியரென்ற பிரிவு இக்காலத்திலே ஆராய்ச்சியில்லாத மக்கட்குப் புலப்படாதொழியினும், அது பண்டைக்காலத்திலிருந்ததென்பதும், அது தெளிவுபெறத்தோன்ருது மாறுவடிவங்கொண்டு இற்றை நாளிலும் நிலை பெற்றுள்ளதென்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்னுந் தேவார அடியினுலே இருமரபினருஞ் சுட்டப்பட்டவாறு காண்க. "தமிழ்ச் சொலும் வடசொலுந் தாணிழற்சேர", 'வடமொழியுந் தென்றமிழும்' என்னும் அருட்டிருவாக்குகளாலே தமிழ் வேறு என்பதும், ஆரியம் வேறு என்பதும் தெளிவே. இற்றைக்காலத்திலே, ஒரு சாரார், வடமொழியினையே தங்கள் மொழி யென்றும், அதுவே எம்மொழிக்குந் தாய்மொழி யென்றுங் கருதுவாராய்த் தமிழ்ப்பெரியாரை வடமொழிவல்ல தம் பெரியாரினும் இழிந்தவராகக்கொண்டு தம் மதத்தை நிலை நாட்டுதலையே கடைப்பிடித்துள்ளார்கள். தெளிவாகப் பேசுமிடத்துப் பார்ப்பனருள் சுமார்த்தரும், பிறரும், தமிழர் ஆரியர் என்ற பிரிவையொழித்து நான்கு வகுப்புக் கொள்கையை நிலை நாட்டி வடமொழியே தமிழ் மொழிக்குத் தாய் மொழி யென்று கூறிச் சங்கராச்சாரியார் முதலிய வடமொழிவல்ல பார்ப்பனப் பெரியாரையே தமிழ்ப்பெரியாராகிய திருஞான சம்பந்த நாயனுர் முதலியோரினும் பெரியாராக வெடுத்துரைத்துச் சிவபிரான் திருக்கோயில்களில் நிகழும் சிவவழிபாட்டினை இழித்துக்கூறிப் பார்ப்பனரல்லாத தமிழ் மக்களைச் சூத்திரரென்று இகழ்ந்துரைத்துத் தமக்குப் பணிவிடை செய்தலே அவாது கடைமையாகுமென்ற கொள்கையைப் பல்லாற்ருனும் நிலைபெறச் செய்வதற்குத் தங்களாலியன்ற வரையிருங்குகூடி வெளிப்படையாகவும், மறைவாகவும் (தந்திரமாகவும்) முயன்று வருகிருர்கள். பார்ப்பனரல்லாதாருள் ஒரு சாரார், அவர்கள் சொல்லை நம்பி, அவர்கள் சமயக்கொள்கைகளையே கடைப்பிடித்து, அவர்களுக்கு எவ்வாற்ருனும் பணிவிடைசெய்து கிடத்தலே தமக்குக் கடவுள் ஏற்படுத்திய கடமை

யென்று எண்ணி ஒழுகுகிறார்கள். இவர்கள், தமிழ் மொழியின் சிறப்பினை உணராமையோடு, தமது சமயம் வேறு சுமார்த்தப் பார்ப்பனர் சமயம் வேறு என்று ஒரு சிறிதும் உணராது, மெய்மைத் தமிழ் நூலறிவினைப் பெறுவது தமிழராய்ப் பிறந்த தங்கடைமை யென்று முற்றும் அறிந்திலராய்த் தமக்கென ஓர் நிலையிலராய்க் குருட்டு நம்பிக்கை மிக உடையராய்க் காலங்கழிக்கின்றனர். மற்றொரு சாரார், உலக வாழ்க்கையில் தம் நலத்தை மட்டுங் கருதி அப் பார்ப்பனர் கொள்கையைத் தாம் ஒப்புக்கொண்டு நடப்பதாக நடித்துத், தமிழ் மொழியின் சிறப்பினையும் தமிழர் பெருமையினையும் நெஞ்சு கொள்ளாது வாளா வாழ்ந்து மாள்கின்றனர். இச்சார்பினருள் செல்வவான்கள் பலரும் அடங்குவர். இவ்வேதுவினாலே, பார்ப்பனரல்லாதாருட் செல்வவான்களது செல்வத்தின் பெரும்பயனைக் கல்வியினும் ஒற்றுமையினும் வல்லவராய் அதிகாரமும் வாய்க்கப்பெற்ற பார்ப்பனர் தம் இனத்தாரின் நலத்துக்காக எளிதிலடைந்து, தம் இனமே எப்போதும் தலைமையாக வாழ்வதற்கு உறுதி தேடிக்கொள்ளுகிறார்கள். தமிழருள் இன்னொருசாரார், உரிய கல்விகற்றுத் தமிழின் சிறப்பினையும், தமிழர் கொள்கையின் சிறப்பினையும், இனிதுணர்ந்தும் வறுமையினாலும் தமக்குள் ஒற்றுமை யின்மையினாலும், தந்நலமிக்க செல்வவான்களால் உதவி செய்யப்பெறாமையினாலும், உண்மைக்கொள்கையை உலகத்தில் பரவச்செய்ய இயலாதவர்களாய், மனம் வருந்திச் செயலற்றிருக்கின்றார்கள்.

இவ்வாறு, தமிழ்ப்பெருங் கூட்டத்தினர், ஆரியக்கொள்கைப் பார்ப்பனரெனவும், பார்ப்பனரல்லாதாருள் ஆரியக்கொள்கைக்கு அடிமைப்பட்ட மாக்களெனவும், சுயநலமிக்க கலை நிரம்பாத செல்வவான்களெனவும், கல்விமான்களெனவும் நான்கு வகுப்பினராகப் பிரிவுபட்டு முன்னேற்ற மடைவதற்கு வழியில்லாது தளர்வினாலும், ஒற்றுமைக் குறைவினாலும், முயற்சியின்மையாலும், தந் நலத்தாலும் பிணிக்கப்பட்டு நாளுக்கு நாள் வாடி மாய்ந்தொழியும் நிலையில் நிற்கின்றார்கள்.

இவருள் முதல் வகுப்பினரும் அவர்கள் தலைவர் பலரும், பொது நலந்தேடுவதுபோலக் காட்டி இன்னும் பண்டை ஆரியக் கொள்கையைத் திறமான சூழ்ச்சிகளால் நிலை நிறுத்தக் கருதுவதால், ஏனையாரோடு அவ்வகுப்பினர் உண்மைக் கலப்புற்ற தமிழராது பெருங்கூட்டத்தினை ஒற்றுமைப்படுத்தத் தகுதியற்றவர்களாகவே இக்காலத்தில் இருக்கின்றார்கள். அவர்களுள் தலைவர்கள் சிலர் உண்மையான ஒற்றுமையைத் தமிழ் நாட்டிலே நிலை நிறுத்தக்கருதினால், அதற்கேற்ற நற்கருத்துக்களைத் தமது



இனத்தார் உள்ளத்திற் பதிக்க முதற்கண் முயலவேண்டும். அவர்கள் தமது வடமொழியைப்போலத் தாய்மொழியாகிய தமிழையும் போற்றி, வடமொழிக்கு எத்துணைக் கல்விச்சாலைகளும், பரிசோதனைகளும், கற்பிப்போரும், நூல் நிலையங்களும் பிறவும் உள்ளனவோ அத்துணை தமிழுக்கும் ஏற்படுத்தி அதனையும் அவ்வாறே வளர்த்தல் வேண்டும். சென்னைச் சர்வகலாசாலை முதலிய நிலையங்களில் தமிழுக்கும், வடமொழிக்குரிய உயரிய நிலை கொடுத்தல் வேண்டும். பிறப்பினாலே உயர்வு உண்டென்று பாராட்டுதல் கூடாது. கல்வியும் ஒழுக்கமுமே, பார்ப்பனருக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும், ஒத்த நிலையில் உயர்வளிக்க வல்லதென்பதைத் தமது வழக்கத்தில் நிலை நாட்ட வேண்டும். கல்வி கற்று முன்வரக் கருதும் பார்ப்பனரல்லாதார்க்கு வஞ்சகமில்லாது தக்க உதவியும் ஊக்கமும் அளித்தல் வேண்டும். பார்ப்பனரல்லாதாரும் தம்மைப்போலவே மக்கட் கூட்டத்தினரே. அவர்களுள்ளும், தம்மோடொத்த அறிவு வளர்ச்சியுள்ளவர்கள், அறிவு வளர்ச்சியெய்தக்கூடியவர்கள் இருக்கின்றார்களென்பதை மறத்தல் கூடாது. வெளியே இதனை ஒப்புக்கொள்வார்போலத்தோன்றி, உள்ளத்துள்ளே பிறவிப் பார்ப்பனனுக்கே உயரிய அறிவு உண்டு என்று உறுதியாக நம்பி ஒழுகுதல் தவறு.

சமயக்கொள்கையுள், சுமார்த்தமதம் வேறு, சைவ சமயம் வேறு, வைணவ சமயம் வேறு, மாத்துவ சமயம் வேறு என்ற உண்மையை உணர்ந்து, தம்மதத்துள்ளே பிறசமயங்கள் அடங்கும் என்று திரியக்கொண்டு பிறசமயக் கோயில்களிலும், மடங்களிலும், தாமே உயர்வடைவதற்கு முயலாது அவ்வச்சமய வரம்புகளைப் பாதுகாத்தல் வேண்டும். காட்டாகச் சிவாகம உரைப்படி நடக்குஞ் சிவபிரான் திருக்கோயில்களிலே, சிவ தீக்கை யில்லாத சுமார்த்தப் பார்ப்பனர் சிவநெறிக்கு எதிரிடையாகத் தமக்கே உரிமைகள் யாவும் தேடிக்கொள்ள முயலுதல் தவறாகும். அங்கேயும் இனவகுப்பையே நிலை நாட்டி உண்மைச் சமயக்கொள்கையை ஒழிக்க முயல்வது தக்கதன்று. தொழிற்றுறைகளிலும், கலைத்துறைகளிலும் இனவேறுபாடு மட்டும் பற்றி நயஞ்செய்தலை ஒழித்தல் வேண்டும். இத்தகைய சீர் திருத்தங்களை அன்னோர் கைக்கொள்வாராகில், அவர்கள் பார்ப்பனரல்லாதாரோடு கலந்து, ஒற்றுமை வாழ்க்கையை நாட்டில் நிலைபெறுத்த வல்லவராவர். இச்சீர்திருத்தங்கள் எளிதாக ஏற்படுமென்று தோன்றவில்லை.

இனிப், பார்ப்பனரல்லாதாருள் ஆரியக்கொள்கைக்கு அடிமைப்பட்டவர்கள் தக்கசீர்திருத்தம் அடைதல்வேண்டும். இவர்

களுள் வடமொழிப் பற்றுடையவர்கள், தமிழ் தமக்குத் தாய்மொழியென்பதை மறத்தல் கூடாது. வடமொழியைப்போலவே தமிழுக்கும் எல்லா நன்மைகளும் விளைதற்குரிய முயற்சிகளைக் கடைப்பிடிக்கவேண்டும். குருட்டு நம்பிக்கையைவிட்டு உண்மை ஆராய்ச்சிசெய்ய முயலவேண்டும். தமது குருட்டு நம்பிக்கையை நிலைநிறுத்தற் பொருட்டுத் தம்மவர்க்கு எதிரிகளாக உள்ளவரோடுகலந்து, தம்மவர்க்கே தீங்கு விளைக்க முயலுதல் அடாத செய்கையாகும். தம்முடைய கருத்து பிறர்கருத்தோடு மாறுபட்டவிடத்து, உண்மையை ஆராய முயலாவிடினும், கருத்து வேறுபாட்டின் ஏதுவாகத் தம்மவரையே பகைவராகக் கருதுதல் பெருந்தவறாகும். அரசாங்க சம்பந்தமான செய்திகளிலே கருத்து வேறுபாடுடைய பார்ப்பனரல்லாதார், இனநலந்தேடுவதில் ஒற்றுமைப்படாது இனத்தெதிரிகளோடு கலந்து, இனத்திற்கே தீங்கிழைக்க முயல்கிறார்கள். இஃது எவ்வளவு ஓர் அறியாமை. இன்னுஞ்சிலர், சமயந்தான் தங்களுக்கு வேண்டியது இனம் வேண்டாமென்று கருதிச் சமயத்தின் உண்மையுமறியாது தம்மொடு சமய ஒற்றுமையுடையார்போல நடிக்கும் இனத்தெதிரிகளோடு கலந்து, தமது சமயத்திற்கும் இனத்திற்கும் இடையூற்றினைத்தேடிக்கொள்கின்றார்கள். காட்டாக வரலாற்று ஆராய்ச்சியில்லாது சமயங் கற்பிக்குமொருவன், தனது சமயம் சைவசமயமாயினும், சுமார்த்தன் வைணவன் முதலியவர்களோடு சேர்ந்து வரலாற்று ஆராய்ச்சி வல்ல சைவனைப்பழிக்கின்றதைக் காண்கின்றோம். மேலும், 'காங்கிரஸ் கட்சியுந் தவறு, ஜஸ்டிஸ் கட்சியுந்தவறு, நமது வருணாச்சிரமமே நல்லது நமது வேதபுராண சரித்திரங்களே நல்லன' என்றெடுத்துமொழிந்து இரண்டு பக்கத்தாரையும் சமயத்திற்கு மாறுபட்டவரெனக் காட்டுதலும் நிகழ்ந்து வருகின்றது. இங்ஙனஞ்செய்தல் பொது மக்களது சமய அறிவிற்கும், இன உணர்ச்சிக்கும் இடையூறு விளைத்தலாகும்.

ஒற்றுமைக்கு எதிரிடையாக உள்ள இத்தகைய முயற்சிகளை அறவே ஒழித்தல் வேண்டும். ஆரியக் கொள்கைப் பிராமணர் தளர்ந்தோரைப் போற்ற வேண்டுமென்ற கொள்கையொடு வகுப்புச் செய்திகளிற்றலையிடுவாராக. கற்றவன் பிராமணன், வல்லவன் பிராமணன், கடவுட்பிறப்பினன் பிராமணன் ஆதலால் அவனுக்கே வேலை கொடுக்கவேண்டும், அவனையே வழிபடுதல் வேண்டும், அவனுக்கே உணவும் உடையும் உறையுளும் உதவவேண்டுமென்றும், அவனுக்கு ஊணிடமுஞ்சாவடியும் அமைத்தாலே மேலுலகத்தின் கதவு திறக்குமென்றும் நம்புவதை முற்றிலும் மறந்து சுற்றந்தழுவுதல் வேண்டும். வறி



யார்க்கே ஈதல்வேண்டும். இல்லாதார்க்கே இல்லமும் உணவும் உதவவேண்டும். எம்மரபினுள்ளும் ஆதுலர்க்கும், ஏழைகட்கும், ஆதரவற்றவர்க்கும், கற்பவர்க்கும், பெற்றோரில்லாப் பிள்ளைகட்கும், அறச்சாலைகள் அமைக்கவேண்டும். அதுவே கடவுட்குகந்தது என்ற கொள்கையை நம்பவேண்டும். அரசாங்கச்செய்திகளில், வெளிபாடம்பரத்தையும் பொய்யுருவத்தையும் நம்பி ஏமாறிப்போதலாகாது. காங்கிரஸின் பெயரைவைத்து, அதன் கொள்கையைப் பின்பற்றாது தந்நலந் தேடுபவரைத் தலைவராகக்கருதுதல் கூடாது. சுயராஜ்யம் வேண்டாமென்று ஜஸ்டிஸ் கட்சியார்கள் சொல்வதில்லை. அரசாங்கத்தில் காங்கிரஸ்காரர் கொள்கையும், ஜஸ்டிஸ்காரர் கொள்கையும் பெரும்பாலு மொத்தனவே. காங்கிரஸ் என்ற வேலியினால் பார்ப்பனக் கட்சியை மூடிக்காட்டுவாரை நன்கறிதல்வேண்டும். பார்ப்பனருள்ளும் பெரும்பாலார் அலுவல் வேட்கையை மேற்கொண்டவர்களே! பார்ப்பனரல்லாருள் அலுவலில்லாதவர்கள் பலரே. இதனைப் பார்ப்பனரல்லாதார் தெளிவுபெற உணரவேண்டும். உணர்வாராயின், காங்கிரஸ் கட்சி ஜஸ்டிஸ் கட்சி யென்பது இனம்பற்றியெழுந்தனவேயன்றி அரசாங்கம்பற்றி எழுந்தன அல்லவென்பதை இனிதறிந்து அரசாங்கத்துக்காகக் காங்கிரஸ் கட்சியோடு கூடமாட்டார்கள்.

சமயச்செய்திகளில் ஆரியக்கொள்கையினர் தமது சமயம் இன்னதென்று முதலில் நடுநிலையில் நின்று ஆராயமுயலவேண்டும். சுமார்த்த மதக்கொள்கைகளையே சைவ சமயக் கொள்கையெனத் திரியக்கொண்டு மயங்குதல் கூடாது, சுமார்த்த சமயம் சைவ சமயம், வைணவ சமய முதலியவற்றின் கொள்கைகளைத் தனித்தனி நன்றாக ஆய்ந்தறிந்து, தங்களுக்குப்பிடித்த சமயத்தைக்கைக்கொள்ளலாம். ஒன்றை ஒன்றாக மாறுபடக்கொள்ளுதலும், ஒன்றைப்பற்றி மற்றொன்றை இகழ்தலுமே தவறாகும். இந்நாட்டிலே நெடுங்காலமாகச் சைவசமயத்தைச் சுமார்த்த சமயம் கீழடக்கித்தனது வகுப்பு வேறுபாட்டை அதன் கண்ணும் கலந்துவிட்டமையால் தமிழர் யாவருக்கும் பொதுவாயிருத்தற்குரிய கோயில்களினும் பிற நிலையங்களினும் வகுப்புக்கொள்கை தலையெடுத்துத் தமிழரது பொது உரிமைகளைக் கெடுத்துவிட்டது. இவ்வகுப்புக்கொள்கையினாலே, தமிழர் தங்களது சமயநலத்தை மிகுதியும் இழந்துவிட்டனர். ஒரு குலத்தினர்க்கும் மற்றொரு குலத்தினர்க்கும் கலகம் விளைந்து, ஒற்றுமைக்கேடு ஏற்படுவதற்கும், குருட்டு நம்பிக்கைகள் நிலைப்பதற்கும் இடமாயிற்று. வகுப்பைவிடச் சமயமே சிறந்ததாதலால், ஆரிய வகுப்புக்கொள்கை தளர்ந்தொழிதல் வேண்டும். தமிழ்ச் சமயப்

பொது நலம் வளர்தல் வேண்டும். இதற்கு மாறுபட்ட ஆரியக் கொள்கையினர் அக்கொள்கைப் பார்ப்பனரோடு கலந்து வேறு சமய நிலையங்கள் ஏற்படுத்திக் கொள்ளுதலே தக்கமுறையாகும். அன்னோர் பொதுவாக அவ்வாறு செய்துகொள்ளாவிடில், வருங் காலங்களிலே வகுப்புப்போராகிய சமயப்போர், கோயில்களி லும், பிற புண்ணிய நிலையங்களிலும் தலையெடுத்துத் தமிழருள் ஒற்றுமைக் கேட்டையும், பெருந்துன்பத்தையும் விளைத்தல் கூடும். ஆதலால் இப்பொழுதுள்ள கோயில்களிலும், பிறகோயில் களிலும் சமய உண்மைக் கெதிரிடையான வகுப்பு வேறுபாடு கள் ஒழிதல் வேண்டும். வகுப்பு வேறுபாடு ஒழியுமென்றதால் கடவுள் நிலையங்களுக்குரிய ஒழுக்கமும், புனிதமும் ஒழிய வேண்டுமென்பது கருத்தில்லை. கள், ஊன் முதலியன விலக்கிச் சமய உணர்ச்சியுடையவராய், நல்லொழுக்கமும், அன்பும் வாய்ந் தவர்கள் பார்ப்பனராய்ப் பிறவாதொழியினும், தூய வொழுக்க முடைய பார்ப்பனரினுஞ் சிறந்தவராதலால், அவர்களைக் கொண்டு பூசை முதலியன நிகழ்த்துதல் முறையாகுமேயன்றித் தவறாகாது. தூய வொழுக்கமுடைய எம்மரபினரும், திருக் கோவில்களில் சிவபெருமானை வழிபடும் உரிமையுடையவரா யிருத்தல் தக்கது. இத்தகைய கொள்கைகளுக்கு மாறுபட்டுப் பிறப்பொன்றே காரணமாக இனம் பாராட்டுபவர் தமிழரின் உண்மைச் சமயத்தை அறியாதவராவர். சமயத்தின் உண்மை யறிவு மிக மிகத் தமிழ் மக்கள் உயர்ந்த நிலையடைவார்கள் திருத்தமுறாதவர்கள். திருத்தத்திற்கு எதிரிடையாக நில்லாமல் இருத்தலே போதுமானது.

இனிப், பார்ப்பனரல்லாதாருள் செல்வவான்களது நிலை ஆராயத்தக்கது. செல்வவான்களுள் கற்றோரும் பலர் இருக் கின்றார்கள். கல்வியில்லாதவரும் பலரே. அநுவன் முறைகளிற் பணந்தேடிய செல்வவான்களும் இதனுள் அடங்குவர். "அறி விலா ரென்னுடைய ரேனுமிலர்" என்ற வண்ணம், கல்வியில்லாத செல்வவான்கள் ஐம்புலனுக்கும் இன்பத்தையே நாடி, அவ் வின்பத்தை எவ்வாற்றானும் பெறுதற்குத் துணை நிற்பவர் களுக்கே தாங்கள், தமது செல்வத்தைப்பெரிதும் உதவுகின்றார் கள். இதனால், தங்கள் செல்வமானது தக்க அறநெறிகளிற் பயன்படுவதில்லை. இவர்கள், மக்களுக்கும் விலங்குகளுக்குமுள்ள வேறுபாட்டினை முதலில் அறிதல் வேண்டும். அருந்தல், துயிலு தல், மகப்பேறு முதலியன விலங்குகட்கும் உளவாயினும், மக் கள் மன அறிவு சான்றாராதலின், விலங்கினும் மேம்பட்டவ ராவார். மனத்திலுள்ளதை யொருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ளுதற்குச் சிறந்த கருவியாகிய மொழியின் கண்ணும்,



நிலைத்தவின்பம் தேடிக்கொள்ளுதற்கு வழியாகிய சமயத்தின் கண்ணும் மொழியும் சமயமும் நிலைபெறுதற்கேதுவாகிய மக்கள் வகுப்பின் கண்ணும் பற்றில்லாதவர்களும், அப்பற்றினைப் பொருட்படுத்தாது, தந்நலம் தேடுகின்றவர்களும், விலங்கு களோ டொப்பரேயன்றி மக்களாகார். விலங்குகளை மக்கள் தாம் கருதியவாறு பயன்படுத்துவதற்கு அவற்றின் மூக்கிற் கயிறு போட்டு இழுப்பதுபோல அறிவுடையார் அறிவில்லா தாரைத் தமக்கேற்ப இணக்கிக்கொண்டு தமது கருமத்தை முடித் துக்கொள்ளுவார்கள். நமது நாட்டிலே, ஆரியக்கொள்கை யுடையவர்கள், ஆரிய மொழியும், ஆரிய முறைகளும், பார்ப் பனர்க்கே அறச்செய்கையும் நிலைத்தற்பொருட்டுத் தம்மொழி யையும், தஞ்சமயத்தையும், தங்கிளைஞரையும் பேணக்கருதா தாரது செல்வத்தைக் கைக்கொண்டு பயன் படுத்தியிருப்பதைப் பலவிடங்களினுங் காணலாம். திருவள்ளுவ நாயனார் 'வறியார்க் கொன்றீவதே ஈகை' யென்று கூறியிருப்பவும், 'இன்மையாற் சென் றிரந்தார்க்கில்லை யென்னாது ஈந்துவக்கும் தன்மையா' ரென்று நம் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்திருப்பவும் அறம் வளர்த்த மாதேவியார், விருந்தினர்க்குச் சோற்றுச் சாலை யும் கற்பவர்க்கே உண்டியுமமைத்திருப்பவும் நம்முடைய நாடெங்கும் பார்ப்பனர்க்கே ஊணிடமுஞ் சாவடிகளும் பார்ப்ப னருக்கே துவாதசிக் கட்டளைகளும் பார்ப்பனர்க்கே பல கோயில்களில் உண்டிஉதவுதலும் நடந்து வருதல் எதனாலென்க.

செல்வமிக்க சைவமடத்தார் பெரும்பான்மையும் இக் காலத்திலும் பார்ப்பனர்க்கே பெரும்பயன் விளைத்தற்பொருட்டு இலவசப்பள்ளிக்கூடங்களும் 'ஆஸ்டல்களும் ஏற்படுத்திச் சைவ சமய மக்களைச் சிறிதுங்கவனியாது இருப்பதற்கு ஏதுவென்ன? பார்ப்பனரல்லாதாருள் செல்வவான்களுடைய பொருள்கள் பார்ப்பனரது நாடகங்களுக்கும் இசைக்கச்சேரிகளுக்கும் உண் டாட்டு விடுதிகளுக்கும் பார்ப்பன வழக்கறிஞர்களுக்கும் வக்கீல் களுக்கும் இன்னும் பார்ப்பனருக்கே பயன்படும். மணச்சடங்கு பிணச்சடங்கு முதலிய பல சடங்குகளுக்கும் ஏராளமாகச் செல வாய்க் கொண்டிருப்பப் பார்ப்பனரல்லாதாருடைய பிள்ளைகள் கல்வியின்றிப் பிழைக்கும் வழியறியாது மயங்கித்தியங்கித் தெரு வில் நின்று திகைப்பானேன்? இவற்றை யெல்லாம் பார்ப்பன ரல்லாதாருட் செல்வவான்கள் நினைந்து பார்ப்பராயின் பார்ப் பனரல்லாதார் நிலை இற்றைக்கு இருக்கின்ற நிலையாக இராது. செல்வவான்களுட் கல்விமான்களும் அதிகாரம் பெற்றவர்களும் தமது பெருங்கூட்டத்தினில் ஏழைகள் படும்பாட்டினை நீக்கி அவர்கட்கு நல்லொழுக்கமும் நற்கல்வியும் உண்டாதற் பொருட்

டும் உலக வாழ்க்கை செம்மையாக அமைதற் பொருட்டும் தங்கள் செல்வம் பயன்பட வேண்டுமென்று தாங்கள் முயலுவதோடு கல்வியறிவுபோதாச் செல்வான்கட்கும் இவற்றை எடுத்து மொழிந்து வற்புறுத்தி நலம் விளைக்குங்கடப்பாடுடையராவர். போதுமான செல்வமுடையவர்கள் மேலும் மேலும் தங்களுக்கே அதிகாரத்தையும் செல்வத்தையும் தேடிக்கொள்ளுதற்கு மட்டுமே முயன்று அம்முயற்சியில் தமது வகுப்புப் பொது நலத்திற்குத் தீங்குவரினும் அதனை நோக்காது தந்நலமே நோக்கிச் செல்லுதல் மிகையாகும்.

இனி வறியவர்களாய்த் தக்க கல்வி யறிவு பெற்றவர்கள் செய்யவேண்டுவது யாதெனில் தம்முள் ஒற்றுமையையும் விடா முயற்சியையும் கடைப்பிடித்து அவற்றிற்கிடையூறான யாவற்றையும் விலக்கிக் கல்வி யறிவு சாலாத செல்வவான்களுக்கும் பிறர்க்கும் தாய் குழந்தைக்கு உணவளித்தல் போல நன்னெக்கங்களையும் அரிய உண்மைகளையும் இனிய முறையிற் போதித்து அவர்களாலே பொதுநல மிக்க வேலைகள் நிகழுமாறு செய்வதேயாம். நம்முடைய நன்மொழிக்கு ஒருவர் காது கொடாவிடினும் அவர்பாற் பரிவு கூர்ந்து அவரது தகுதிக்கு ஏற்ற முறையில் அவரைத் திருத்த முயலுதலும் தமது சொல்லை ஏற்றுக்கொள்ளாத காலத்தில சீற்றங்கொள்ளாமல் அவரது அறிவு அவ்வளவிற்றென்று பொறுதலும் இன்றியமையாது வேண்டற்பாலதாம். ஊக்கமும், பிறர் பிறர் சொல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காக்கும் நல்லியல்பும் ஊறு வந்த விடத்து உலைவுறாதநெஞ்சமும், பொது நல்நோக்கமும், நடுநிலையில் நின்று பொருளை யாராயுந் திறமும், குற்றங்களை மறந்து குணங்களைப் பாராட்டும் நற்பழக்கமும், கல்விச்செருக்கின்மையும், எவ்வாற்றானும் அறநெறி பிறழாமையும் உளவாகப்பெறின் இவ்வகுப்பினரது நன் முயற்சி நாளடைவில் உறுதியடைந்து தழைத்தோங்கிப் பயன் பெறு மென்பது திண்ணம்.

ஈண்டுக்குறித்த கருத்துக்களைத் தமிழ்ப்பொது மக்கள் நினைந்துபார்த்து, அவற்றுள் நல்லவற்றைத் தழுவி நடப்பார்களாயின், தமிழ் மக்களும், ஏனைய மக்கள் வகுப்பினரைப்போல உயர் நலம் பெற்று இனிது வாழ்வர். அவர்களது முன்னோர்களுடைய பண்டைத் தனிப்பெருஞ்சால்பும் தமிழகத்தில் மீட்டும் நிலைபெறக் காணலாம். இதற்கு இறைவன் அருள் புரிவானாக.



# திருவருட்பா ஆராய்ச்சி

[இளவழகனார்]

(௬௨௧ - ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றுட் சில :

"புரிகின்ற வீட்டகம் போந்து அடிப்பட்டுப் புறங்கடையில்
திரிகின்ற நாய்க்கும் சிரிப்பாமென் பாவிச் சிறுபிழைப்பை"
(௧, திருவருண்முறையீடு, ௨௧௫)

"என்கருத் தறியாமற் கழறுகின்ற
தனக்கேளர் பாற்சென்று அடியேன் இதயம் தளர்வதெல்லாம்
நினக்கே தெரிந்தது"
(௧, திருவருண்முறையீடு, ௨௨௪)

"தெருவிடத்தே விளையாடித் திரிந்தவெனை வலிந்தே
சிவமாலை யணிந்தனை"
(௩, பிரியேனென்றல், ௬)

"வந்தாய் ஒருநாள் அருள்வடிவின் எளியேன் கண்டு களிப்படைய
வந்தாய் அந்தோ கடைநாயேன் மறந்துவிடுத்தேன் மதிகெட்டேன்"
(௨, திருவிண்ணப்பப்பதிகம், ௬)

இவைகள் வள்ளலார் திருவொற்றியூரிலிருந்தவரையில் நிகழ்ந்தனவாகும்.

"திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனால்
திருவுளங்காட் டியநாளில் தெரிந்திலன்இச் சிறியேன்
பெருநெறி என்னுளத் திருந்து காட்டியநாள் இருந்தேன்
பிழைபடாத தெய்வமறை இதுவெனப் பின்பு உணர்ந்தேன்
ஒருநெறியில் எனது காத்து வந்தளித்த நாளில்
உணராத உளவையெல்லாம் ஒருங்குணர்ந்து தெளிந்தேன்"
(௨, திருவருள் விலாசம், ௨)

"திருவளர் திருவம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்"
(௩, பிள்ளைப்பெருவிண்ணப்பம், ௧௧௪)

என்பன தில்லையிலும்,

"கால்மலர்என் தலைமீது தான்மலர அளித்தாய்"
(௪, அபராத மன்னிப்பு மாலை, ௬)

என்பது கருங்குழியிலும் இருக்கும்போது நிகழ்ந்தவை.

"நீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள் செலுத்திய திருச்சிலம் பொலி
கேட்டபோ திருந்த கிளர்ச்சியும்" [நான்

"நினது மலர்ப்
பாதந் தலைமேற் சூட்டியெனைப் பணிசெய் திடவும் பணித்தனை"
(சு, பிரிவாற்றாமை, எ)

"பாதி யிரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருள்
சோதி அளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்"
(சு, பிரிவாற்றாமை, ய)

"செய்வகை என்னெனத் திகைத்தேன் திகையேல் என்றொருநாள்
திருமேனி காட்டியெனைத் தெளிவித்தாய் நீயே"
(சு, பிரியேனென்றல், ௬)

"முன் நாளில் யான்புரிந்த பெருந்தவத்தால்
முகமலர்ந்து மொழிந்த அருண் மொழியை"
(சு, வாதனைக்கிரங்கல், ய)

"இனையே
நேர்காண வந்தனமென்று என்மடிமேல் மலர்க்கால்
தானிலைக்க வைத்தருளிப் படுத்திடநான் செருக்கித்
தாள்களெடுத்து அப்புறத்தே வைத்திடத்தான் நகைத்தே
ஏன்நினைத்தாய் இவ்வளவு சுதந்தரம்என் மகனே
எனக்கிலையோ என்றருளி எனையாண்ட குருவே"
(சு, அருள்விளக்க மாலை, ௬க)

"இவ்இரு நிலத்து இயல்அரு ளொளியால்
பூதகல் வடிவங் காட்டி" (சு, திருவடிப் புகழ்ச்சி, கரு)

"முன் பாட்டுக்
காலையிலே வந்து கருணை யளித்தே தருமச்
சாலையிலே வாவென் றான்தான்" (சு, பாமாலை ஏற்றல், ௬)

"கங்கணம் என்கரத் தணிந்தாய்" (சு, திருவருட்கொடை, ச)

"யான்பாட நீதிருத்த என்னதவம் செய்தேனோ"
(சு, தனிப்பாடல்கள்)

இவையெல்லாம் அடிகள் வடலூரில் இருந்தவரைக்கும் நிகழ்ந்தவைகள்.

இங்ஙனமெல்லாம் அரிய பெரிய திருவருட் செய்கை உடையராய்த் திருவள ரொளிக் கண்ணேயே உள்ளம் அழுந்தி அவ்வண்ணம் திகழ்ந்த அடிகட்கு மலவாற்றல் அடங்கி நிற்றலும் அவர்கள்,

"இவையெலாம் அந்நாள் உடையனோ அவனோ இந்த நாள் இறைவநின் அருளால்
நவையெலாம் தவிர்ந்தேன் தூயனாய்"
(சு, அபயத்திறன், உ௯)

என்றதற் கிணங்கத் தூயராய்ச், சிவபிரான் திருவடிப்பேறொன்றையே விரும்பி நின்றனர்கள். உலகத் தீயில் விடுத்து மக்களின்



மலத்தைப் பொசுக்கி அவ்வாற்றால் தூயராய்த் தலைப்பட்டு வருவாரைத் தமது திருவார்ந்த திருவடிக்கீழ் நிறுத்தித் தம்வண்ணமாக்கிக் கொள்ளும் சிவபிரான் அந் நிலைக்குத் தக்கராய் நின்ற நம் இராமலிங்க அடிகட்கும் தமது தண்ணார் அருளை வழங்கினார்கள். உடனே நம்மையாள எழுந்தருளிய அருளொளி வள்ளலார் சீமுக ஆண்டுத் தைத்திங்களின் புனர்பூசத்தன்று இரவுபதினைந்து நாழிகையில், மேட்டுக் குப்பத்துச் சித்திவளாகத் திருமாளிகையில், திருவருளால் தம் புலன்களின் உணர்வை உண்முகப் படுத்தி ஒரு நெறிய அரிய நிலையில் அமர்தலும், அவர்கள் பரு உடம்புதானே கழன்று நின்றது. "நானானேன் தானானேன் நானுந்தானும் ஆனேன்" (சு, அநுபவ நிலை) என்றபடி ஒரு நிலை பெற்றவராய் நம்பெருமான் மறைந்தனர்கள். கழன்ற உடம்பும் ஆண்டே மறைந்தது. அது மறைபட்ட இடத்திற்றான், வள்ளற் பெருமான் ஆண்டடைந்த அருள் நிலைக்கு அறிகுறியாக அணையாத ஒரு திருவிளக்கு வைக்கப்பட்டு இன்னும் வளர்ந்து கொழுந்தோடிப் பொலிகின்றது. ஓம் சிவம். எனவே, வள்ளலார் இத் தமிழுலகத்தில் ஐம்பது ஆண்டுகளும் மேலோர் ஐந்து திங்களும் விளங்கினர்கள் என்று அறிதல் வேண்டும்.

இதுகாறுங் கூறியவாற்றால், நம் இராமலிங்க அடிகள், தம் ஐந்தாந் திங்களிலேயே தில்லையில் விளங்கும் நடனத்தேவைக் காணப் பெற்றுச்,

"சைவரெனும் நின்னடியார் சபைநடுவே வைத்தருளித்
தெய்வமென்று வளர்க்கின்றாய் சிற்சபையின் நடிக்கின்றாய்"
(சு, திருவருட்கொடை, ச)

என்று மொழிந்தபடி அன்றுமுதற் சிவக்குழந்தையாய் வளர்பவராகித் தம் அண்ணனார் குடும்பத்தில் தம் பன்னிரண்டாம் ஆண்டுவரையில் இருந்து தம் ஒன்பதாம் ஆண்டிலேயே ஆண்டுச் சிவபிரானது திருமுருகன் அருட்கோலத்தால் ஆளப்பட்டுச் சோனை மாரி பொழிந்தாற்போல அன்றையிலிருந்து அருட்பாப் பாடத் தொடங்கித் திருத்தணிகைப் பாடல்கள் முழுவதும் பாடினர் என்பதும், தம் பதின்மூன்றாம் ஆண்டிலிருந்து துறவு பூண்டு சென்னைக்கு அருகிலுள்ள திருவொற்றியூர்க்குச் சென்று அப் பெருமானை முதல் திருமுறைப் பாடல்களாலும் இரண்டாந் திருமுறையில் "புண்ணிய விளக்கம்" என்பதிலிருந்து "விண்ணப்பப் பதிகம்" வரையில் உள்ள பெருந்தொகைப் பாடல்களாலும் நெஞ்சுருகப்பாடி வழுத்தினர் என்பதும், அங்கு நடிக்கும் தியாக நடத்தின் வாயிலாகத் தில்லை நடத்தை நினைந்து தம் இருபத்து நான்காம் ஆண்டில் தில்லையைச் சேர்ந்து இரண்டாந் திருமுறையின் "தரிசனப்பதிகம்" முதல் அத் திருமுறையின் முடிவுகாறும்

அங்குப் பாடினர் என்பதும், எனவே திருவொற்றியூருடையாரைப் பன்னிரண்டாண்டுகளாகப் பரசி ஆண்டிருந்தனர் என்பதும், அக் காலத்திலேயே தமிழ்க் கல்வியும் சிவக் கல்வியும் நிரம்பப்பெற்று "மனுமுறைகண்ட வாசகம்" முதலான அரிய உரைநடை நூல்களுக்கு நூலாசிரியராயும் மாணவர்க்கு அறிவுறுக்கும் இலக்கண இலக்கியச் சமய அளவை அருளாசிரியராயும் வயங்கிப் பலப்பல அருட் செய்கைகளுமுடைய அருள் நிலைக் கண்ணராய் இருந்தனர் என்பதும், மேலும்சூழ இருந்தார் செய்யுங் கடுந் தொல்லைகளால் சென்னையில் அவர்கள் திருமணம் செய்துகொண்டு அதன்கண் அழுந்தாது அதனினின்றும் அன்றே பெயர்ந்து மண் பெண் பொன் என்னும் மூன்று பற்றையும் அறத் தொலைத்து வெள்ளைத்துணி உடுத்த அருள் துறவியாகித் திருவொற்றியூரிருந்து தில்லை எய்தினர் என்பதும், திருவொற்றியூரிலிருக்கும்போது திருமுல்லைவாயில் திருவலிதாயம் முதலான திருக்கோயில்களுக்குச் சென்று சிவத்தை வணங்கினமைபோலத் தில்லையிலிருந்தபோதும் சீகாழி வேளூர் முதலான திருக்கோயில்களுக்குச் சென்று அவரை வணங்கி வந்தனர் என்பதும், தில்லைத்தேவின் திருவருட்குளத்தில் ஆழ்முழுகி அவாத் தீர்ந்து அமைந்த பின்பு தம் இருபத்தெட்டாம் ஆண்டு அதற்கு அடுத்த கருங்குழிக்கு வந்து அன்பர்கள் வேண்டுகோளால் பதினொராண்டுகள் அங்குத் தங்கி ஒற்றியூரை நினைந்து மூன்றும் திருமுறையும் தில்லையை நினைந்து நான்காந் திருமுறையும் பாடியதோடு உயிரிரக்கங் குறித்துப் பலப்பல இடங்களிலும் அளவிறந்த விரிவுரைகளைப் புரிந்து மக்களை நல்வழிப் படுத்தினர்கள் என்பதும், உயிரிரக்க விரிவுரைகளைச் செய்யுங் காலங்களில் உயிர்கள்படும் எல்லாத் துன்பங்களும் தொடர்ந்து நினைக்க வள்ளலார்க்கு இடமுண்டானதால் அத் துன்பங்களுள்ளும் வள்ளலாரைப் பெரிது வருத்தி நெஞ்சுருக்கியதும் மிகவும் பெரியதும் யாரையும் விடாததுமான பசித்தாகத் துன்பத்தை எப்படியாலுங் கூடுமானவரையில் நீக்குதற்குத் திருவுளங்கொண்டு சில இடங்கட்கு நடுவிடமாகிய வடலூரைக் குறிக்கொண்டு அங்கொரு உண்மை அறக்கூழ்ச் சாலையைக் கட்டுவித்துத் தமது நாற்பத்து நான்காம் ஆண்டில் அங்கெழுந்தருளி உயிரிரக்கக் கட்டுரை யொன்றை உருக்கு முறையில் எழுதி எவ் வகுப்பினராயினும் பசித்து வருவாரை ஒரே காலத்தில ஒரே இடத்தில் இருத்தி அன்பு கனிந்த நெஞ்சத்தோடும அருள் கனிந்த உள்ளத்தோடும் எப்பொழுதும் சோறிடு மாறு தகுதியுள்ள சிலர்க்குப் பணித்துத் தாமே அவ்வாறு நேரிலிட்டுங் காட்டினர் என்பதும், நட்டப்பிரான் வழிபாட்டிலேயே உள்ளம் அழுந்திய வள்ளலார், அதற்கிணங்கக் கடவுளை அரு உருவான ஒளிப்பிழம்பு வடிவில் நிறுத்தி எல்லாரையும் வணக்கவைக்க எண்ணி ஓர் அறிவு சபை கட்டினர் என்பதும், தமது நாற்பத்தெட்டாம் ஆண்டுவரையில் வடலூரிலும் பின்னிரண்டாண்டுகள் அதற்கடுத்த மேட்டுக் குப்பத்திலும் இருந்து இரண்டிடங்களிலும் பலப்பல அருட் செய்கைகளும் உயிரிரக்க விரிவுரைகளும் புரிந்தும் ஆறுந் திருமுறையைப் பாடியும் மக்களைத் திருத்தவேண்டிய அளவு திருத்தினர் என்பதும், தம்மால் ஆகவேண்டிய இவ்வுலக வேலைகள் முடிந்ததும் தமக்கும் மெய்யான தாயநிலை வந்ததும் திருவருள் விளைந்து விட்டமையால் தமது ஐம்பதாம் ஆண்டு முடிந்து மேலொன்று நடக்கையில் மேட்டுக் குப்பத்துச் சித்திவளாகத் திருமாளிகையில் மறைந்தருளினர் என்பதும், அவர்கள் அருளுடம்பு மறைந்த இடத்தில் அன்று ஏற்றிவைத்த திருவிளக்கு ஒன்று இன்றும் சுடர்விரிந்து ஒளிருகின்றது என்பதும் விளங்குகின்றன.

ஒன்பதாம் ஆண்டிலேயே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுச் செந்தமிழ்ப் பாடல்களை அருளிவந்ததும், பன்னிரண்டாம் ஆண்டுக்குள் எல்லா நூல்களையும் நன்கு கற்றுக்கொண்டதும், பதின்மூன்றும் ஆண்டாகிய அத்துணைப் பச்சிளம் பருவத்தில் மூவாசையும் முற்றத் துறந்து உயர் சமயமாகிய சைவ சமயத்தைப் பொது நல்வழி (சமரச சன்மார்க்கம்) என்னும் பெயரால் அழைத்து அந் நிலையில் நின்றதும், பிள்ளையவர்களின் வினைநலத்தை நன்கு விளக்குகின்றன. மேல் நிகழ்ந்த செயற்கரிய அருட் செய்கைகளையெல்லாம் நினைத்துப் பார்த்தால் அடிகளின் பெருமை தாமே வெளியாம்.

> "அருளுடையோரைத் தவத்தில் குணத்தில் அருளில் அன்பில்
> இருளறு சொல்லினுங் காணத்தகும்"

என்று பொருட் பெரியாராகிய பட்டினத்தடிகள் அருளியபடி நம் இராமலிங்க அடிகள், தவமுங் குணமும் அருளும் அன்பும் இருளறு சொல்லும் இளமையிலிருந்தே நிரம்ப உடையவர்கள் தாம் என்பது அவர்கள் வரலாற்றில் நன்கறியக் கிடத்தலின் அவர்கள் தெளிந்த சிவத் திருவருளாளரே யாவர் என்பதும், ஆகவே அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட பாடல்கள் திருவருட்பாவே யாகும் என்பதும் உண்மையே யன்றோ? அதனுடன் அடிகள், 'சைவசமயம்' என்பது 'உயிரிரக்கமே' என்றும், எங்கும் அதனைத் தழையச்செய்தலே சைவசமயத்தைத் தழையச் செய்ததாகும் என்றும் துணிந்து அத்தொண்டில் இறங்கி நெடிக ஆற்றிப் பரப்பிவிட்டமை எல்லோராலும் பெரிது பாராட்டப்பட வேண்டுவதாம். மேலும் ஒன்று, சைவசமயத்தை ஒரு சாரார்து என்று இருக்கவிடாமல் அஃது எல்லார்க்கும்

பொதுவான தொன்றென்று 'சமரச சன்மார்க்க'ப் பெயரால் வெளிப்படுத்து வற்புறுத்து விசிறிவிட்டமை அன்பர்களே! யாவராலும் மறக்கக் கூடியதோ? அஃது இன்றியமையாது இப்போது செய்யவேண்டிய செயற்கருஞ் செய்கையே யன்றோ? ஒற்றுமை கெட்டுப் பல்லாற்றானும் விரிந்து சிதறிக் கிடக்கும் மக்களின் அறியாமை உள்ளங்களை, இக்காலத்தில் அவர் திருத்தியவாறு அவரன்றி மற்றவர்கள் திருத்துவது எளிதாகுமா!

"என் உயிர்தான் உயிரிரக்கந்தான் ஒன்றதே: இரண்டிலை: இரக்கம் ஒருவில் என் உயிரும் ஒருவும்: என் உள்ளத்து ஒருவனே நின்பதத்து ஆணை" (௬, பிள்ளைப் பெருவிண்ணப்பம், ௯௩) என்று அடிகள் நெஞ்சங்குழைந்து உரைப்பதையும், மற்றும் உள்ள பிள்ளைப் பெருவிண்ணப்பப் பாடல்களையும், பிறவற்றையும் நோக்கினால் யார்தான் உடனே நெஞ்சம் அஞ்சி அடங்கி ஒடுங்கிப் பணிவுகாட்டி 'இவர் அருள் சுரந்த பேரருட் பெரியார்' என்று சொல்லிச் சொல்லி மதித்து வணங்காது போவர்! இவர் தம் பேருள் நிலையை, இவர்கள் வடலூரி லிருந்தபொழுது உடனிருந்து கண்ட முருகதாச சுவாமிகள் என்னும் அருட்பெரியாராகிய வேறொருவர் அவரைப்பற்றித் தாம்பாடிய வினைப் பதிகத்தில்'

"இரக்கமே வடிவாம் வடலூரான்"

என்றும்,

"மினைகைநேர் ஒரு சிறிய வண்டெழுந்து
விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி
இனகு நெஞ்சகம் பெறும் வடலூரான்"

என்றும் சிறந்தெடுத்துக் கூறிப் போற்றினார்கள் என்றால், வள்ளலாரின் நிகரற்ற அருள்வடிவை எவ்வளவு பெருமையாக எம்மனோர்கள் போற்றுதல் வேண்டும். ஆகவே, பொதுவாக எல்லாரும், சிறப்பாகச் சைவராவாரும் இராமலிங்க அடிகள் ஆற்றிய அருள் தொண்டையும் அருளிய அருட்பாவையும் நினைந்து, அதனினின்றும் அவர்கள் அருள் நிலையாகிய உயர் நிலையைத் தேர்ந்து நடுவு நிலையினின்றும் பிறழாது அவர்களை நம் திருமுறைப் பெரியார்களுக்கு அடுத்தபடி வைத்து வணங்குவார்களாகித், தோன்றாத் துணையாயிருந்து செய்துவரும் அவர்கள் அருளையும் பெற்று உய்யக் கடவர் என்பது.

இவ்வளவும் வள்ளலார் வரலாற்றை ஒருவாறு கூறினமையான், இனி அவர்கள் அருளிய திருவருட்பாவை ஒவ்வொரு திருமுறையாக வகுத்துக்கொண்டு தனித்தனி ஆராய்வோம்.



# வடசொற்றமிழகராதி

(௯௩௯-ம் பக்கத்தொடர்ச்சி)

[திருவளர் செல்வி நாகை நீலாம்பிகை அம்மையார்]

நார்த்வீக் மகளிர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்.

| வடசொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| அபங்கம் | பழுதின்மை |
| அபசகுணம் | தீக்குறி |
| அபசயம் | தோல்வி |
| அபசரம் | விரைவு |
| அபசாரம் | தீச்செய்கை |
| அபசாரி | வேசி |
| அபசெயம் | தோல்வி |
| அபட்சம் | வெறுப்பு |
| அபதூறு | கொள்ளை, பழிச்சொல் |
| அபத்தம் | தவறு, பொய் |
| அபமரணம் | முதிராச்சாவு |
| அபமானம் | புகழின்மை, இழிவு |
| அபமார்க்கம் | தகாவழி |
| அபயகரம் | அஞ்சல் என்றருளுங்கை |
| அபயம் | அச்சமின்மை |
| அபயஸ்தம் | அஞ்சாக்கை |
| அபயதானம் | அடைக்கலம் |
| அபயர் | மறவர் |
| அபயவாக்கு | அஞ்சேலெனல் |
| அபரம் | பின் |
| அபராதி | குற்றவாளி |
| அபரிமாணம் | அளவில்லாதது |
| அபரிமிதம் | அளவின்மை |
| அபரூபம் | அருமை |
| அபலம் | பயனற்றது |
| அபவாதம் | பழிச்சொல், ஒவ்வாச்சொல் |
| அபவிருத்தி | குறைவு |
| அபாகம் | முதிராமை |
| அபாக்கியம் | செல்வமின்மை; வறுமை |
| அபாசம் | குற்றம், அவாவின்மை |
| அபாண்டம் | பழி |
| அபாயம் | அழிவு, கேடு |
| அபாரம் | அளவின்மை |
| அபிசந்தானம் | அணைப்புதல் |
| அபிசாரி | வேசி |
| அபிஞ்ஞானம் | அடையாளம், அறிவு |

| வடசொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| அ[illegible]க்தம் | மருந்து |
| அபிஷேகம் / அபிடேகம் | திருமுழுக்கு |
| அ[illegible]சாரம் | [illegible] |
| அபிநயம் | [illegible] |
| அபிநயர் | கூத்தர் |
| அபிநவம் | புதுமை |
| அபிப்பிராயம் | [illegible], எண்ணம், உட்கருத்து |
| அபிமானபுத்திரன் | வளர்ப்புப்பிள்ளை |
| அபிமானம் | பற்று |
| அபிமானி | பற்றுடையான் |
| அபிமானித்தல் | மதித்தல், உயர்த்திக்கூறல் |
| அபி[illegible] | தடை, [illegible] |
| அபிராமம் | அழகு |
| அபி[illegible] | காமவேள், [illegible] |
| அபி[illegible] | விருப்பம் |
| அபிவிருத்தி | பெருக்கம் |
| அபின்னம் | ஒற்றுமை, வேறாகாத |
| அ[illegible]மானம் | பற்று |
| அபே[illegible] | பெருவிருப்பம் |
| அபூதம் | இல்லை |
| அபூருவம் / அபூர்வம் | அருமை |
| அபூபம் | அப்பம் |
| அபேட்சித்தல் | விரும்பல் |
| அபேதம் | ஒற்றுமை, வேறின்மை |
| அப்பியங்கனம் | எண்ணெய் முழுக்கு |
| அப்பியசித்தல் | பழகல் |
| அப்பியாசம் | பழக்கம் |
| அப்பிரகாசம் | இருள் |
| அப்பிரசித்தம் | விளக்கமின்மை, இருள் |
| அப்பிரதக்ஷிணம் | இடப்பக்கச்சுற்று |
| அப்பிரதானம் | முதன்மையற்றது |
| அப்பிரமாணிகன் | பொய்யன் |
| அப்பிரமேயம் | அளவிடப்படாதது |
| அப்பிரயோசனம் | பயனற்றது |
| அப்பிராகிருதம் | மேலானது |
| அப்பிரீதி | வெறுப்பு |
| அப்பு | நீர் |
| அமங்கலம் | தீமை, நலமற்றது |
| அமங்கலி / அமங்கலை | கைம்பெண் |
| அமதி | அறிவின்மை, அறியாமை |
| அமாத்தவம் | அறியாமை |
| அமரர் | வானோர் |



| வடசொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| அமராபதி | வானுலகு |
| அமராவதி | வானுலகு |
| அமலம் | அழுக்கின்மை, தெளிவு |
| அமாத்தியர் | அமைச்சர் |
| அமாவாசியை / அமாவாசை | புதுப்பிறை |
| அமிசம் | பங்கு, கல்வினை |
| அமிதம் | மிகுதி |
| அமித்திரர் | பகைவர் |
| அமிருதம் | மருந்து |
| அமிர்தகலை | நிலவு |
| அமுது | சோறு, அடிசில் |
| அமூர்த்தம் | உருவமின்மை |
| அமேத்தியம் | அழுக்கு, தூய்மையின்மை, பவ்வீ |
| அமோகம் | மிகுதி, பெருக்கம் |
| அம்சம் | புள், தாரா |
| அம்பகம் | கண் |
| அம்பட்டன் | சிரைப்போன் |
| அம்பரம் | வெளி |
| அம்பிகை | தாய், அம்மை |
| அம்புசம் | தாமரை |
| அம்புதி | கடல் |
| அம்புயம் | தாமரை |
| அம்புராசி | கடல் |
| அம்போதரம் | முகில் |
| அம்போருகம் | தாமரை |
| அம்மிரம் | மாமரம் |
| அம்லிலம் | புளிப்பு |
| அயக்காந்தம் | இரும்பிழுக்கி |
| அயச்சிந்தூரம் | இரும்புச் செந்தூள் |
| அயநம் | வழி |
| அயமேதம் | ஆட்டுவேள்வி |
| அயம் | இரும்பு, ஆடு |
| அயனம் | வழி |
| அயன் | நான்முகன் |
| அயிக்கம் | ஒற்றுமை, ஒன்றிப்பு |
| அயிராவணம் | வெள்ளையானை |
| அயிராவதம் | ” |
| அயுக்தம் | பொருந்தாது |
| அயோக்கிதை | தகுதியின்மை |
| அரணி | தீக்கடைக்கோல் |
| அரணியம் | காடு |
| அரதனம் | சிலம்பணி, மணி |

(தொடரும்)

இன்றது. அது முதலில் மனிதர்கள் பிழைப்புக்காகச் செய்த ஏற்பாடுகளின் வேறுபாட்டினால் உண்டாகத் தொடங்கியது. தகப்பனாயுள்ள ஒருவன் தான் பிழைப்புக்காகச் செய்து வந்த தொழிலையே தன்மகனும் பின்பற்ற வேண்டுமென்று விரும்புவது இயல்பு. இவ் விருப்பமே முதன் முதலில் வேறு வேறான வகுப்புக ளுண்டாவதற்கு ஏதுவா யிருந்தது. வேதத்தின் பழைய பாகங்களில் 'பிராமண'ம் என்ற சொல்லுக்குத் 'தெய்வத்துக்கு வணக்கமாகச் செய்யப்பட்ட இசைப் பாட்'டென்பது பொருள். அவ்வகைப் பாடல்கள் செய்தலில் வல்லவராகச் சிலரிருந்தனர். அந்தப் பாட்டுக்களுக்குக் கைமாறாக, அவைகளாற் பாடல்பெற்ற தெய்வங்கள், பாடியவர்களுக்கும் அப்பாட்டுகள் எந்த அரசர் பொருட்டுப் பாடப்பட்டனவோ அந்த அரசர்களுக்கும், நற்பயனளிப்பதாக நம்பிக்கை யிருந்தது. எந்தத் தெய்வத்தை யாவது அன்புவழிப்படுத்தும்படி நேர்ந்தபோதெல்லாம் அப்பாட்டுக்காரர் வேண்டியவர்க ளாயினார்கள். அவர்கள் வாழ்வும் மேன்மையான தாயிற்று. ஆகவே அவருள் தந்தைமார்கள் மக்களை அவ்வகையிலே பழகச் செய்தனர். அதனால் காலமுறையில், சில குடும்பத்தவர்கள் அப்பாட்டுக்களைச் செய்வதும் தெய்வங்களை வணங்குங் காலத்தில் அவைகளை இசைமுறையாகப் பாடுவதுமே தொழிலாகக் கொண்டனர். அப்படிப் பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பார்ப்பனர் என்று அழைக்கப்பட்டு ஒரு தனியான வகுப்பாயினர். இவ்வாறே அரசர்கள் படைத்தலைவர்கள் படைவீரர்கள் ஆகிய இவர்களின் பின் வந்தவரும் தத்தம் முன்னோர் முறைகளைப் பழகி வேறொரு தனியான அரச வகுப்பின ரானார்கள். உழவுதொழில் செய்வோர் 'வைசிய'ராயினர். ஆரியர்கள் 'பஞ்சாப்'பினின்று நீங்கி வட இந்தியாவில் சென்று பரவிய காலத்தில் சில பழைய குடிகள் அவர்கள் இனத்தோடு கலந்து 'சூத்திர' வகுப்பாயினர். இவ்வாறாக நான்கு வகுப்புகளிருந்தன. ஆனாலும் தொடக்கத்தில் அவ்வகுப்புகளைப் பற்றிய கட்டளைகள் பிற்காலத்தி லானது போல அவ்வளவு வலிவாகிவிடவில்லை. வேதகாலம் உபநிடத காலம் இவைகளுக்குப் பிந்திய இதிகாச காலத்திலும் கூடப் பார்ப்பனர் அரசரோடும் வைசியரோடும் உண்ணல் செய்திருக்கின்றார்கள். துருவாசர் திரௌபதியால் விருந்து செய்யப் பெற்றதை யறியாதார் யார்? உயர்ந்த வகுப்பினர் தாழ்ந்த வகுப்புப் பெண்களை மணஞ் செய்தல் வழக்கமா யிருந்தது. தாழ் குலத்தார் உயர் குலத்துப் பெண்களை மணத்தலும் வழங்கா திருக்கவில்லை. வேதப்பாட் டாசிரியர்களுள் காவலர், 'அயிலுஷர்' போலப் பார்ப்பன ரல்லாதார் அநேகருளர். வகுப்பு இப்போது எப்படியா யிருக்கிற தென்பது சொல்லவேண்டுமோ? நாலு



வகுப்பு மிப்போது நாலாயிரம் வகுப்புகளா யிருக்கின்றனவென்று சொல்லலாம்."

மேலே கூறியபடி இக்கால வகுப்பு ஏற்பாட்டுக்குச் சான்று ஆரிய நூல்களுள் 'மநு ஸ்மிருதி'யும் 'புராண'ங்களும் இவற்றுக்குப் பின் உண்டாகிய நூல்களுமே. முந்திய நூல்களுள் வகுப்புகளைப் பற்றிச் சில விடங்களிற் கூறியிருந்தாலும் அப்படிக் கூறிய வகுப்புகள் மற்ற நாட்டிலுள்ளவை போலத் தொழில் பற்றிய வகுப்புகளே யன்றி இப்போது இந்தியாவில் மட்டுமே யுள்ள பிறப்பொன்றே ஏதுவான வகுப்புகளல்ல. இப்போதைய வகுப்பு வழக்கங்கள் மநுஸ்மிருதியையும் புராணங்களையும் பின்னிடச் செய்துவிட்டன. இந் நூல்கள் ஒரு வகுப்பின் உள் வகுப்புகள் ஒன்றோடொன்று பெண் கொண்டு கொடுப்பதையும் அவ்வவ் வகுப்பு அதன்கீழ் வகுப்புப் பெண்களை மணப்பதையும் விலக்கவில்லை. இப்போதைய வகுப்பு வழக்கங்களோ அவ்வகை மணங்களைத் தவிர்த்து விட்டன. இப்போது பார்ப்பான் வேளாளன் பெண்ணைக் கொள்ள விரும்பினாலும் வேளாளன் அதற்கு இசையான். 'தாழ்ந்த' வகுப்பார் உயர்ந்த வகுப்பார் அளிக்கும் உணவையேற் றுண்பார்களே யன்றிக் (பெண் கொள்ளல் கொடுத்தலாகிய,) கலத்தல் செய்ய ஒருப்படார். "உயர்ந்த" வகுப்பாரிடத்துத் "தாழ்ந்த" வகுப்பார் உணவேற் றுண்பது நிலையாக இல்லை. "சிங்கு", "வீரசைவர்" முதலிய சில வகுப்பினர் பார்ப்பனர் சமைத்த உணவையும் புசியார்; தத்த மினத்தாரகத்து மட்டுமே உண்ணல் செய்வர்.

---

# இருபெண்மணிகளின் உரையாடல்

[திருவாளர். மூலத்துறை. குமரநாயகம் பிள்ளை அவர்கள்]

(௩௧௨-ம் பக்கத் தொடர்ச்சி)

பா—எப்படியாயினும் நீ குற்றவாளிதான். ஆன்றோர்கள் தாயைப் பெருமையாய் கூறவில்லையா? நீ சற்று முன்பு சொன்ன பெரியோர்களில் ஒருவர் "தாயுடன் சென்று பின் தாதையைக்கூடி" என்றும், வேறு சிலர் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றும் தாயாருக்குத் தந்தையைவிட மதிப்புக்கொடுக்க வில்லையா? நீ ஏன் அவர்களுடன் சேர்ந்து தாயினிடத்தில் அன்பு வைக்கக்கூடாது?

ளைக்கேட்டிராதவ ளாகையால் உள்ளே அடங்கியுள்ள கதைகளை அறிய ஆவல் மிககவளாய்த் தாள்களை நீக்கிப் பாயிரம் என்ற தலைப்பைக் கண்டனள். மேல் நோக்குகையில் எல்லாம் செய்யுட்களாய் இருப்ப, எழுத்துச் சோரமின்றி வாசிக்க இயலாமலும் கருத்து விளங்காமலும் இருந்தமையால் தோழியைக் கேட்டறிவான் அவள் நல்வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனள்.)

தில—பார்வதி, அப்புராணம் எவ்வளவு இன்பத்தை ஊட்டுகிறது பார்த்தனையா.

பா—எனக்கொன்றும் விளங்கவில்லை.

தில—உனக்கு விளங்காவிட்டால் பின் யாருக்கு விளங்கப் போகிறது? சற்று முன்பு திலகவதியாருடைய வரலாற்றைப் பன்முறை பயின்றுள்ளதாக நீயே சொல்ல வில்லையா. அதை அறிந்த உனக்கு இது அரிதாகுமா.

பா—நான் உன்னிடத்தில் உண்மையையே பேசுவேன். திலகவதியாரின் 'வரலாற்றைப் 'பெரிய புராண வசனம்' என்னும் நூலிற்படித்துள்ளேனே யன்றிச் செய்யுளில் படித்தறியேன்.

தில—ஆ! அப்படியா. சரி. சரி, ஆனால் இனிமேல் செய்யுளில் படிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

பா—உரைநூ லல்லவா படிப்பதற் கெளிது. கொஞ்ச நேரத்தில் எவ்வளவோ பக்கங்கள் படித்து விடலாம். செய்யுளானாலோ ஒரு பாட்டுப் படிப்பதற்கு ஒன்பது நாழிகை செல்லும். அங்ஙனம் உழைப்பெடுத்துப் படித்தாலும் பொருள் விரைவில் விளங்காது. அவ்வளவு வருந்துவானேன்?

தில—என்ன வருத்தம்? எல்லாம் பழக்கந்தான். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்த தொரு கல்வி மனப்பழக்கம்.........குணம்" எனபது நீ அறியாததோ; இரண்டு மூன்று திங்கள் பெரியோர்களைக் கேட்டறிந்து செய்யுள்களை வாசித்துப் பொருளறியப் பழகிக்கொண்டால் பின் மிகுதியான இன்பத்தை நுகரலாம்.

(தொடரும்)

---



# மெய்யறிவு

[திரு. வேலாயுதம் அவர்கள்]

கடவுள் அருள்பெற்றில்லாத எந்த வேலையும் தவறியே போம்.

ஒரு மனிதன், தானே வல்லவன், தான் விரும்பியவற்றையெல்லாம் செய்து விடலாம் என்று நினைப்பானாயின், அவன் அறியாமையில் மூழ்கியிருக்கிறான்; விரைவில் மயக்கந் தெளிவான். கடவுள் முன்னிலையில் அவன் நாணற்புல் ஆட்டி வைக்கும் வண்ணம் ஆடவேண்டியவனே.

* * * * * *

ஒருவரையும் குறை கூறாதே. உன்னையே கடிந்துகொள். கடந்த காலத்தில் நீ எத்துணைப் பெரியோனாயிருந்தாலும், உன் செயல்கள் உயரியனவா யிருந்தாலும், ஒரு கொடி நேரத்தில் ஓர் இழிசெயல் செய்து விட்டால், நீ கீழே தள்ளப்படுவாய். உயர்வான இடத்திலிருந்து, ஏணியின் கடைசி படிபதை உணர்வாய். அம்மட்டோ? உன்னைப்பற்றி உயர்வாய் நினைத்து, மதித்திருந்தவர்களும், உன்னைப் போற்றியவர்களும், உன்னை எள்ளி நகையாடுவார்கள். தண்ணீரினின்றும் வெளியேற்றப்பட்ட தாமரைப் பூப்போன்று. நீ அனைவராலும் எரிக்கப்படுவாய். ஐயோ என்ன வருத்தமான வேலை! இந்த உண்மைகள் எல்லாம் எத்துணைத் துக்கத்தி லாழ்த்தும்! போற்றிப் புகழப்பட்ட நிலையிலிருந்து, தூற்றப்படும் நிலைக்கு வந்துவிடுவாய். உலகினர் அனைவருமே உண்மையறிஞர்க ளல்லர். உனக்கு இரக்கங்காட்டி அறிவூட்டிக் கைதூக்கிவிட மெய்யறிவாளர் மிகச்சிலரே உளர். உலகத்தில் பெரும்பான்மையோர் விரிந்த நோக்கமுடையவர்களல்லர்; நீ அழுக்கன், கூடிப்பழக்கக்கூட அருகனல்லன் என்று புறக்கணிக்கப்படுவாய். இவற்றை யெல்லாம் முன்னறிந்து நடந்திருந்தோமாகில், நாம் எவ்வளவு அறிவுடையவர்களாயிருந்திருப்போம். என்செய்வது? வாழ்நாளில் வழுக்கி வீழ்ந்துவிடுகிறோம். படுகுழிகள் ஆங்காங்கு இருக்கின்றன. நம்முடைய குறைகளை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடிய துணிவும் நமக்கில்லை. நாம் எவ்வளவு உறுதியான கொள்கைகளை உடையவர்களாயிருந்த போதிலும், ஒரு விநாடியில் மதியைக்கடன் கொடுத்து விடுகிறோம். பின்னர் வீழ்ச்சி தான். ஆனால் ஈடேற வழியில்லையா? இல்லையென்று யார் சொல்வது? இல்லை, வழி உன்னிடமே இருக்கிறது. கடவுள் உனக்கு அறிவைக் கொடுத்திருக்கிறார். அதை உபயோகித்து நீ எங்கே

* அநுபவஞானம்.

தவறினாய் என்பதைக் கண்டறி. திருத்தமடைந்து புதிய வழியைக் கடைப்பிடி. கடந்தகாலத்தை எச்சரிக்கையாய்க் கொண்டு நிகழ்காலத்தில் நல்லவனாய் நடந்து, எதிர்காலத்தில் மீண்டும் புகழ்பெறு.

* * * * * *

ஒருவனுடைய தீச்செயலைக் கண்டிக்கலாமே யொழிய செயல் செய்த மனிதனைக் கண்டிப்பது அறமல்ல. எவன் தீச்செயல் செய்யாதவன்? செய்த அச்செயலுக்காக அவன்வருந்தி உருகும்போது அவனுக்குக் கைகொடுத்து, அடைக்கலங்கொடு. உன்பெருந்தன்மையும், உயர்ந்த இயல்பும் அதிற்றானிருக்கிறது. பழிக்குப் பழி வாங்கவேண்டு மென்கிற உணர்ச்சியி லல்ல. ஒரு மனிதன் உண்மையிலேயே தான் செய்த தவறுக்காக வருந்தும்போது, நீ அவனை எதிர் கொள்ளாயேல், நீ தீவினை செய்தவனாவாய். பின்னர் அதற்காக நீ வருந்தவேண்டி வரும். ஒருவனுக்கு நீயும் உடந்தையா யிருந்துவிட்டுப் பின்னர் ஒன்று மறியாதவன்போற் பதுங்குவாயானால், நீ வஞ்சகன். உனக்குக் காலத்தில் தண்டனை கிடைக்கும். தவறிழைப்பது மனித இயற்கை ஆனால் நல்வழியில் திருந்துவதற்குக் குறிப்புப் பார்க்க வேண்டியதில்லை. நம்மைச் சேர்த்து அணைத்துக்கொள்ளவும் நம்மை மன்னிக்கவும், நமக்கு அறிவு வெளிச்சத்தைக் காட்டவும் அன்பே உருவாகிய கடவுள் என்றைக்கும் காத்திருக்கிறார். நாம் அவருக்கு மட்டுந்தான் அச்சப்பட வேண்டும். நாம் அவருக்கு அஞ்சி என்றைக்கு நடக்கிறோமோ, அன்றுதான் நமக்கு அறிவு தோன்றும் நாள்.

---

# தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல்

[இளவழகனார்]

“சுடர்த்தொடீ! கேளாய், தெருவில்நாம் ஆடும்
மணல்சிற்றில் காலின் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா ‘இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன்’ எனவந்தாற்கு, அன்னை
அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் ‘சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா’ என்றாள் எனயானும்
தன்னை அறியாது சென்றேன்மற்று என்னை
வளைமுன்கை பற்றி நலியத்தெருமந்திட்டு



‘அன்னாய் இவனொருவன் செய்ததுகாண்’ என்றேனா,
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான்’ என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்” (கலித்தொகை, ருக)

(இ - ள்.) ஒளி பொருந்திய வளையலை உடைய தோழீ! இதைக் கேள். பேதைப்பருவத்தில் நாமெல்லாரும் தெருவிலே மணல்வீடுகட்டி விளையாடும்போது அம்மணல் வீட்டைத் தன் காலால் அழித்து என் தலையிற்செருகி வைத்திருந்த பூமாலையை அறுத்து வரிவரியாயிருக்கும் என் பந்தையும் பறித்துக்கொண்டு ஓடி அவ்வப்போதும் துன்பம் செய்துவந்த அழுக்கான குறும்பன் இருக்கிறானே அவன், முன்னொரு நாள், என் தாயும் யானுமாக வீட்டில் இருந்தபோது நீர் வேட்கையாய் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே வந்தான். வரவே, என் தாய், ஒளியுள்ள கல்லாலிழைத்த நகைகளையணிந்த பெண்ணே! தகடித்துச் செய்யப்பட்ட பொற்செம்பினால் அவனுக்கு நீர் வார்த்து அதை அவன் குடிக்கும்படி செய்துவிட்டு வா என்று சொன்னாள். சொல்லவே நானும் அவன் குறும்புத் தன்மையை அறியாமல் தண்ணீர் எடுத்துக்கொண்டு அவனிடம் போனேன். போனதும் அவன், வளையல் உள்ள என் முன்கையைப் பிடித்து என்னை ஓர் ஆட்டம் ஆட்டிக் கலக்கிவிட்டான். அதனால் நான் கலக்கமடைந்து அம்மா, இவன் செய்ததைப் பார்த்தனையா என்று கூச்சலிட்டேன். கூச்சலிடவே, உடனே என் தாய் அலறிப் பதறி ஓட்டமா ஓடி வந்தாள். வரவே, நீர் குடித்ததனால் அவன் இணறித்தணறி விக்கலெடுத்தான் என்று சொல்லி விட்டேன். அவளும் அவனை வைதுகொண்டே அவன் முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அப்போது அந்தத் திருட்டுப் பையன் என்னைக் கொன்றுவிடுவான்போலக் கடைக்கண்ணாற் பார்த்து இப்படிப்பட்ட மகிழ்ச்சியான நோக்கையைச் செய்தான். என்பது.

இருந்தேமா என்பது கடைக்குறை. இருந்தேமாக என்றுகொண்டு, இருந்த அளவில் என்று பொருள் செய்க. ‘செய்ததுகாண் என்றேனா’ ‘விக்கினான் என்றேனா’ என்பதும் அது. இச்செய்யுளில்வரும் தன்னை என்னும் சொற்களெல்லாம் ஆண்மகனைக்குறிக்கும். தெருவில விளையாடிய காலம் அவளுக்குப் பேதைப்பருவம். இப்போது அவள் மங்கைப் பருவமடைந்து விட்டனள். ஆதலால், குழந்தையா யிருந்தபோது செய்ததுபோல இப்போதும் குறும்பு செய்வானோ என்று நினைத்து, அவன் கள்ளத்தன்மையை அறியாமற் சென்றேன் என்பாள், ‘யானுந் தன்னை அறியாது சென்றேன்’ என்றாள். முன்னமே அவ ஆண்மகனிடத்தில் தனக்குள்ள காதலன்பினால், தான் அவனிடம் செல்லல் வேண்டும். அவனைப் பார்த்தல் வேண்டும். அவன் தன் கையைப்பிடித்து அசைப்பது போன்ற இவ்வகையான செயல்களைச் செய்யப்பெறுதல் வேண்டும் என்று தனக்குள் எண்ணிய அவள் ‘அவனை அறியாது சென்றேன்’ என்று மறைத்துக்கூறினாள். அவட்கு அவனைப் பார்க்கவேண்டும் என்னும் ஆசை இருந்ததென்பது, “தலைவி காட்சி யாசையாற் கலங்கிய அதற்கேற்

பத் தலைவற்குங் காட்சியாசை கூறிற்று. அது 'சுடர்த்தொடீஇ கேளாய்...செய்தானக் கள்வன் மகன்'' என்று இக் கலித்தொகைச் செய்யுளையே எடுத்துக் காட்டி நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்தில் (தொல், களவியல், ௧௬)விளக்கங் கூறினமையாலும் புலனாம்.

தோழிக்குத் தான் தவறிப்போனதாகத் தெரியாதபடி இங்ஙனங் கூறினாள். இங்ஙனங் கூறினா ளாயினும் தான் காதலித்த அவ் ஆண் மகனை மணஞ்செய்து வைப்பது தோழியினாலேயே முடிவதாதலால், தனக்கு அவ் ஆண்மகன்மேற் காதல் உண்டு என்பதை அவளுக்குத் தெரிவித்தல் வேண்டி 'தன்னையான் உண்ணுநீர் விக்கினேன் என் றேனா' என்று உள்ளதை உள்ளபடியே அவளுக்குச் சொல்லிவிட்டாள். இங்ஙனங் கூறினமையால் தோழிக்கு இவர்கள் இதுவரையிற் கொண் டிருந்த களவொழுக்கத்தின் நினைப்புப் பிறந்தது. இனி அவள் நற்றாய் முதலியவர்கட்கு இச்செய்தியை எட்டவைத்து மணத்தை முடித்து வைப்பாள். 'தன்னைப் புறம்பழித்து நீவ' என்பதில் 'புறம்பழித்து' என் பதைப் புறம்பு அழித்து என்று பிரித்துக்கொண்டு அவ் ஆண்மக னுடைய 'முதுகைப் பலகால் அழித்து அழித்துத்தடவ' என்று பொருள் செய்வார் நச்சினார்க்கினியர். விக்கல் கொண்டவன் முதுகிலே அழித்த ழித்துத் தடவுதற்காம் இயைபு எதும் இல்லாமையாலும், முதுகினை உணர்த்துதற்குப் 'புறம்' என்னுஞ் சொலன்றிப் 'புறம்பு' என்னுஞ்சொல் ஆன்றோ ரிலக்கியங்களிற் பெரும்பான்மையாய் வழங்காமையாலும், ஆனால்அவ்விக்கல் எடுத்துத் தொண்டை அடைத்துத் துன்புறுவோனை 'மெல்லக் குடித்தாலென்ன: என் இவ்வளவு விரைவு' என்று அன்பினாற் பழித்துக்கொண்டே அவன் முதுகினைத் தடவுதல் உண்மையாலும், ஒரு சொன் னீரதான 'புறம்பழித்து' என்னும் சொல் இருந்தவாறு எளிதிலே 'வைது' என்னும் பொருளைத் தருதலாலும் அவ் 'வைது' என்னும் பொருளே அதற்குப் பொருத்தமானதென்று அறிஞர் கருதுவர். 'சுடர்த் தொடீ' 'சுடரிழாய்' 'அடற்பொற் சிரகம்' என்னுஞ் சொற்குறிப்புகளால் பழங்காலத்துத் தமிழ்மக்களின் செல்வநிலையும் அதற்கேற்ப அவர்கள் பெற்றிருந்த நாகரிக உணர்ச்சியும் நன்குபெறப்படும். கள்வன் மகன் என்பது கள்வனான மகன் என்பதற்கு. அதாவது திருட்டுப் பையன் என்பது. இது அன்பின் மொழி.

## பாட்டின் முன்பொருள்

தலைவனும் தலைவியும் ஊழ்வலியாலும் இறைவன் அருளாலும் தாமே ஓரியற்கையிடத்தில் ஒருகாலத்தில் எதிர்ப்பட்டுக் கண்டு, ஒருவரை யொருவர் 'இவள் யாரோ, இவன் யாரோ' என்று ஐயுற்றுப் பின் தெளிந்து, அறாக் காதல் துளும்பப் பெற்றாராய் நீங்குவர். நீங்கின அள விலே பின்னும் பின்னுங் காதல் மிக மல்குமாதலின் அவர்தாம் ஒருவரை யொருவர் தத்தமக்கு இன்றியமையாதவ ரெனக் காண்பர். ஆதலின் பின் னொருகால் அவர்கள் கூடியபொழுது தம்தம் அவாவைப் புலப்படுத்து, மீண்டுங் காண்பதற்குப் பகற்குறி இரவுக்குறி என்னும் இரண்டு குறி களும் இடை இட்டு ஓர் ஏதுவினால் வருந்திப் பிரிவர். பெரும்பாலும் இரவுக்குறியே இவர்தம்முட் கொள்ளப்படும். "இரவுக்குறி பொருந்திய துணைப்பகற்குறி பொருந்திற்றன்று' (இறையனாகப்பொருளுரை, ௪௮) என்பதனாலும் இது விளங்கும். அங்ஙனம் குறியிட்டுப் பிரிந்தவர்தாம் இப்



பாட்டிற் காணப்படும் தலைவனும் தலைவியும் என்க. கூடுதற்பொருட் டுக் குறிவைத்துக் கொள்ளும் வழக்கத்தைக்

"கூடுதல் வேட்கையாற் குறிபார்த்து'' (கலித்தொகை, ௪௧)

என்னும் மற்றொரு குறிஞ்சிக் கலிப்பாட்டும் தெளிவிக்கும்.

இங்ஙனங் குறியிட்டுக்கொண்டு வந்தபிறகு அக்குறிப்படி செல்லு தற்குத் தலைவனுக்கு இயலுவதுபோல் தலைவிக்கு எளிதில் இயலாது. தலைவன் எப்போதும் வெளியே சுற்றும் வாய்ப்புடையவன். தலை வியோ வென்றால் ஏது இல்வழி வெளியே சென்றால் பிறர் ஐயுறவு கொள்ளத்தக்க நிலையுடையவள். ஆதலால் தலைவிக்குக் குறிப்படி நடத் தல் இயலாதுபோம். மேலும், இவ் ஏதுவாற் பகலில் இயல்வது அரிதாயிற்று. இனி இரவு நேரத்திலும், தாய் துஞ்சாமை, ஊர் துஞ் சாமை, காவலர் விழித்திருத்தல், நிலாக்காய்தல், நாய்துஞ்சாமை முத லிய இடையூறுகளால் தலைவி தலைவன் இட்ட குறியினிடத்தில் வரப் பெறாமற் காலந்தாழ்த்துவள். ஆனால், இட்ட குறியிடத்தில் தலைவன் மட்டும் தவறாமல் வந்து பார்ப்பான். தலைவி அங்கு வரப்பெறாமை யால் அவளைக் காணானாகி 'அவளைக் காணவேண்டுமே' என்னுங் காட்சி யாசை மிகப்பெற்றுச் சற்றுக் கலங்கிப் பின் நீங்குவான். அந்த நேரத்தி லேயே தலைவியும் 'பகற்குறியின் தப்பி இவ் இரவுக் குறியினுந் தப்பி னேனே, நீண்ட நாழிகையாக அவனைக் காணமாட்டாது நிற்கின் றேனே. அவனோ அக்குறியிடத்துக்குத் தவறாது வந்து, நம்மைக் காணாமல் வருந்துவான். எப்பொழுது அவனைப் பார்க்கப்பெறுவேன். அவனைப் பாராவிட்டாலும், குறியிடத்துக்குத் தான் வந்து போன மைக்கு அடையாளமாக மோதிரம், மாலை, முத்து முதலியவற்றில் ஏதே னும் ஒன்று அங்குள்ள செடிகொடிகளில் அவன் இட்டுவைத்திருப்பான். அதனையேனும் விடியற்காலையிற் போய்ப் பார்த்துவருவேன்' என்று வருந்திக் கிடந்து வீட்டாரெல்லாரும் துஞ்சிய காலத்தே தலைவி குறி இடத்திற் சென்று தலைவனைக் காணாமல் அவன் அங்கு இட்டுவைத்த குறியைமட்டுங் கண்டு அதன் வாயிலாகத் தன் கணவன் வந்து போயிருக் கிறான் என்று உணர்வாள். உணரவே ஆற்றா வருத்தம் அவளுக்கு மீதூர மீண்டும் அவனை இத்துணை இடையூறுகளி னிடையே எப்பொழுது காண்பேனோ என்று வேட்கையின் மயங்கி வருந்திப் பின் வீடு சேர்வள். இதுவரையிற் கூறியவை இப்பாட்டிற்கு முன் நிகழ்ந்த செய்திகளாம். இனி இப் பாட்டின் செய்தி வருமாறு:—

## பாட்டின் கருப்பொருள்.

இவ்வாறு தலைவன் தலைவியாகிய இருவரும் பகற்குறி, இராக்குறி என்னும் இருவகைக் குறியிலும் ஒருவரை யொருவர் காணமாட்டாமல் தவறிவிட்டார். அத்தவறுதலால் மடங்காத காட்சியாசை தம்முள் மிகப் பெற்றாராய் அதனாற் பெரிது வருந்தி அவ் ஆசையினாலேயே நெஞ்சு சொல் செயல் என்னும் மூன்றும் மயங்கத் தாமும் மயங்கித் துடித்துக் கிடப்பர். உடனே தலைவன் நினைந்து பார்ப்பான்: 'நம் தலைவி, தன் வீட்டினரின் இடையூறுகளால்தான் குறியிடத்துக்கு வரத் தவறியிருப் பாள். நமக்கு அவா மிகுகின்றது. அவளுக்கும் அப்படித்தான் இருக்கும். ஆகவே அவளைப் பார்ப்பதற்கு வழி யாது? ஒன்று தோன்றுகிறது. பொழுதும் விடிந்தது, வெயிலேறி உண்ணும் வேளை யானமையால், நாம் நம் தலைவியின் வீட்டிற்கு விருந்தாகச் செல்லல்வேண்டும். நாம்

செல்லும் நேரமும் அவர்கள் உணவுகொள்ளும் நேரமாயிருத்தல்வேண்டும். அப்பொழுது சென்றால்தான்

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."— (திருக்குறள், விருந்து, ௨)

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டல் அரிது." ( ,, , ஈகை, ௭)

என்னும் நம்மவர்கள் கொள்கைப்படி நம்மைத் தவறாது விருந்தேற்பார்கள். அப்பொழுது எப்படியாவது நம் காதலியைக் கண்டு நாம் கண்களிக்கப் பெறுவோம் அதுதான்வழி, என்று இவ்வாறெல்லாம் நினைந்து முடிவு செய்துகொள்வான். கொண்டதும் அவன் ஒரு விருந்துபோலத்



தலைவியின் வீட்டுக்குவந்து சேர்வான். அங்ஙனம் வந்தவனே இப்பாட்டின் தலைவன். இவ்வாறு குறிபிழைத்துக் காணாது கலங்குங்கால் உண்ணும்போது தலைவியின் இல்லத்தில் இருவரும் எதிர்ப்படுதல் உண்மையை ஆசிரியர் தொல்காப்பியனார்,

"இருவகைக் குறிபிழைப்பு ஆகிய இடத்தும்
காணா வகையின் பொழுதுநனி இகப்பினும்
தான்அகம் புகாஅன் பெயர்தல் இன்மையின்



காட்சிஆசையின் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிய கையறு பொழுதும்
புகாஅக் காலைப் புக்குஎதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்." —(தொல், களவியல், ௧௬)

என்று கூறுதல் காண்க.

வீட்டுக்குவந்த தலைவன் இல்லிரே என்று கூப்பிட்டு உண்ணுநீர் கேட்க, அத் தலைவியின் தாயுமிசைந்து தன் மகளை நீரூட்டிவாவெனச் சொன்னாள். அது கேட்ட தலைவிக்கும் தலைவனுக்கும் அப்போது எழுந்ததான மகிழ்ச்சிக்கு ஓரெல்லை கூற முடியுமோ? உடனே தலைவியும் நீர்கொண்டு தனித்து வருதலும், தலைவன் தன்னுள்ளிருந்து துருத்தித் துருத்துவரும் பேர் ஆர்வத்தினிடையே கரைகாணாய் அவளைக் கண்டனன். அங்ஙனமே அவளும் கண்டாள். காட்சியாசையால் ஆற்றாது இன்னது செய்வதென்று தோன்றப்பெறாமல் நின்றவன் அவள் கையை விரைந்துபற்றி அசைத்து அசைத்து நலித்துவிட்டான். அவளும் தனக்குள்ள காதலால் அதற்கு மகிழ்ந்து என்னவென்று வந்த தாய்க்கு அதனை மறைத்துவிட்டாள். என்றாலும், தனக்குத் திருமணம் தன் பெற்றோரால் விரைந்து முடியவேண்டி யிருத்தலின், தன் தோழிக்குமட்டும் தப்புக் கருத்து உண்டாகாத முறையில் அறத்தொடு நின்று ஒரு வகைக் குறிப்பொடு இதனைக் கூறினாள்.

களவின்கண் குறிவழிச் சென்ற தலைவிக்குக் கருக்கொள்ளல் நேர்ந்துவிடுமாதலின், அங்ஙனம் குறியின்கண் தனிப்பட்ட அக்காலத்திலிருந்து இரண்டு திங்களுக்குள் அவள் தன் காதலனை மணந்துகொள்ளல் வேண்டுமென்று இறையனாரகப் பொருள்கூறும். ஆகவேதான், தலைவி 'உண்ணுநீர் விக்கினான் என்றேனா' என்று தன் தோழிக்குக் குறிப்பளாயினாள் என்பது.

இங்ஙனம் புணர்ச்சி நேரும் ஒழுக்கத்தைக் குறிஞ்சித் திணை என்றும், முறைப்படி தோழியின்பால் அறிவித்துப் பெற்றோரான் மணஞ் செய்யப்படவேண்டும் என்று முறையுற நன்னெறி நிற்றலைத் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் என்றும் கூறுவார் அகப்பொருள் நூலார்.

இனி இக்காதலர் மணஞ்செய்துகொண்ட பின்பு, அவர்கள் அவ் அன்பின் வழியே இல்வாழ்க்கையில் நிற்பாராதலின், அவரிடையில் என்றும் இன்பமே எழுமன்றித் துன்பம் தினைத்துணையும் தோன்றமாட்டாது. அன்பினாற் பிணையலுற்ற இக் காதன்மக்கள், அன்பினையும் அதன்வழி வரும் இன்பினையுமே எந்தச் செயலினுங் காணும் இயல்பினராய் நிற்பாராதலால், மெய்யுறு புணர்ச்சிக்கண் உண்டாம் சிற்றின்பக் கருத்து விரைந்து நீங்க, அறிவுப் புணர்ச்சிக்கண் உண்டாம் பேரின்பக் கருத்தே மிகுந்தெழப்பெற்றுத் தமது அறிவினிடையில் எழுந்த அவ் அன்பின்பங்கொண்டு இறைவன்பால் செலுத்தவேண்டிய அன்பும் அதன் பயனும் இனைத்தென் றுணர்ந்து, அவ் உணர்ந்தாங்கு இறைவனை வணங்கி வீடு பெறுவர் என்க. "இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞான ஒழுக்கத்தோடொத்த இயல்பிற்றாகலானும் பழிபாவ மின்மை யானும்" என்று இக்காதன் மணம் இறையனாரகப் பொருளுரையிற் சிறப்பிக்கப்பட்டமை காண்க (க-ம் நூற்பா) அங்ஙனமன்றி, முன்பின் னறியாத இருவர்தாம் பெற்றோராற் பிணைக்கப்பட்டால், அவர் தமக்குள் அறிவு ஒற்றுமை தோன்றாதுபோம். தோன்றாதுபோகவே, அவர்

ரைக்கேட்டிராதவளாகையால் உள்ளே அடங்கியுள்ள கதைகளை அறிய ஆவல் மிககவளாய்த் தாள்களை நீக்கிப் பாயிரம் என்ற தலைப்பைக் கண்டனள். மேல் நோக்குகையில் எல்லாம் செய்யுட்களாய் இருப்ப, எழுத்துச் சோரமின்றி வாசிக்க இயலாமலும் கருத்து விளங்காமலும் இருந்தமையால் தோழியைக் கேட்டறிவான் அவள் நல்வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனள்.)

தில—பார்வதி, அப்புராணம் எவ்வளவு இன்பத்தை ஊட்டுகிறது பார்த்தனையா.

பா—எனக்கொன்றும் விளங்கவில்லை.

தில—உனக்கு விளங்காவிட்டால் பின் யாருக்கு விளங்கப் போகிறது? சற்று முன்பு திலகவதியாருடைய வரலாற்றைப் பன்முறை பயின்றுள்ளதாக நீயே சொல்லவில்லையா. அதை அறிந்த உனக்கு இது அரிதாகுமா.

பா—நான் உன்னிடத்தில் உண்மையையே பேசுவேன். திலகவதியாரின் 'வரலாற்றைப் 'பெரிய புராண வசனம்' என்னும் நூலிற்படித்துள்ளேனேயன்றிச் செய்யுளில் படித்தறியேன்.

தில—ஆ! அப்படியா. சரி. சரி, ஆனால் இனிமேல் செய்யுளில் படிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

பா—உரைநூலல்லவா படிப்பதற்கெளிது. கொஞ்ச நேரத்தில் எவ்வளவோ பக்கங்கள் படித்துவிடலாம். செய்யுளானாலோ ஒரு பாட்டுப் படிப்பதற்கு ஒன்பது நாழிகை செல்லும். அங்ஙனம் உழைப்பெடுத்துப் படித்தாலும் பொருள் விரைவில் விளங்காது. அவ்வளவு வருந்துவானேன்?

தில—என்ன வருத்தம்? எல்லாம் பழக்கந்தான். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்........குணம்" என்பது நீ அறியாததோ; இரண்டு மூன்று திங்கள் பெரியோர்களைக் கேட்டறிந்து செய்யுள்களை வாசித்துப் பொருளறியப் பழகிக்கொண்டால் பின் மிகுதியான இன்பத்தை நுகரலாம்.

(தொடரும்)

---



# மெய்யறிவு*

[திரு. வேலாயுதம் அவர்கள்]

கடவுள் அருள்பெற்றில்லாத எந்த வேலையும் தவறியே போம்.

ஒரு மனிதன், தானே வல்லவன், தான் விரும்பியவற்றையெல்லாம் செய்து விடலாம் என்று நினைப்பானாயின், அவன் அறியாமையில் மூழ்கியிருக்கிறான்; விரைவில் மயக்கந் தெளிவான். கடவுள் முன்னிலையில் அவன் நாணற்புல் ஆட்டி வைக்கும் வண்ணம் ஆடவேண்டியவனே.

* * * * * *

ஒருவரையும் குறை கூறாதே. உன்னையே கடிந்துகொள். கடந்த காலத்தில் நீ எத்துணைப் பெரியோனாயிருந்தாலும், உன் செயல்கள் உயரியனவாயிருந்தாலும், ஒரு நொடி நேரத்தில் ஓர் இழிசெயல் செய்துவிட்டால், நீ கீழே தள்ளப்படுவாய். உயர்வான இடத்திலிருந்து, ஏணியின் கடைசி படியதை உணர்வாய். அம்மட்டோ? உன்னைப்பற்றி உயர்வாய் நினைத்து, மதித்திருந்தவர்களும், உன்னைப் போற்றியவர்களும், உன்னை எள்ளி நகையாடுவார்கள். தண்ணீரினின்றும் வெளியேற்றப்பட்ட தாமரைப் பூப்போன்று. நீ அனைவராலும் எரிக்கப்படுவாய். ஐயோ என்ன வருத்தமான வேலை! இந்த உண்மைகள் எல்லாம் எத்துணைத் துக்கத்திலாழ்த்தும்! போற்றிப் புகழப்பட்ட நிலையிலிருந்து, தூற்றப்படும் நிலைக்கு வந்துவிடுவாய். உலகினர் அனைவருமே உண்மையறிஞர்களல்லர். உனக்கு இரக்கங்காட்டி அறிவூட்டிக் கைதூக்கிவிட மெய்யறிவாளர் மிகச்சிலரே உளர். உலகத்தில் பெரும்பான்மையோர் விரிந்த நோக்கமுடையவர்களல்லர், நீ அழுக்கன், கூடிப்பழக்கக்கூட அருகனல்லன் என்று புறக்கணிக்கப்படுவாய். இவற்றையெல்லாம் முன்னறிந்து நடந்திருந்தோமாகில், நாம் எவ்வளவு அறிவுடையவர்களாயிருந்திருப்போம். என்செய்வது? வாழ்நாளில் வழுக்கி வீழ்ந்துவிடுகிறோம். படுகுழிகள் ஆங்காங்கு இருக்கின்றன. நம்முடைய குறைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடிய துணிவும் நமக்கில்லை. நாம் எவ்வளவு உறுதியான கொள்கைகளை உடையவர்களாயிருந்த போதிலும், ஒரு விநாடியில் மதியைக்கடன் கொடுத்து விடுகிறோம். பின்னர் வீழ்ச்சி தான். ஆனால் ஈடேற வழியில்லையா? இல்லையென்று யார் சொல்வது? இல்லை, வழி உன்னிடமே இருக்கிறது. கடவுள் உனக்கு அறிவைக் கொடுத்திருக்கிறார். அதை உபயோகித்து நீ எங்கே

---

* அநுபவஞானம்.

16673



ளாலுற்ற அன்பையும் அதன் பயனும் இன்பத்தையும் உணரார். உண ராராதலை, இறைவனை வழிபடுமுறையும் அறியாது அங்ஙனம் அறியா மையின் வீணே உடலுறு புணர்ச்சிக்கண் இடைவிடாது நின்று பொருந் தாத தீய மக்களைப் பன்றிக் குட்டியென அளவிலாதுபெற்றுத் தமது வாழ்க்கையில் நெடுக நோய் முதலாம் இடுக்கண்களுக்கே இரையாகி எந்த இன்பமும் நுகர்தற்கிடனின்றி மீண்டும் மீண்டும் பிறப்பதற்கே தொழிலாகி அவர் இறந்துபோவார். ஆதலால், இனிய உலகவாழ்க்கை யும் சிறந்த இம்மைப் பயனும் காதன்மணத்தைக் கேள்விக் கிடத்தலா இரக்கம் மிக்க இறைவனது அருளழைப்புக்கு ஏற்பப் பிறவியின் நோ க முணரும் அறிஞரெல்லாங் காதன்மணம் பொருந்தவும், அங்ஙனே தம் மக்கட்குப் பொருத்துவிக்கவும் கடமைப் பட்டிருக்கின்றனர்.

---

## மதிப்புரை

காரைக்குடி வள்ளுவர் நிலையத்தின் வெளியீடான காதற்கடிதங் கள் என்னும் அரிய உரைநூலொன்று எமது பார்வைக்குவந்தது, அது கடல் கடந்து பொருள்தேடும் பொருட்டுக் காதலன் தன் காதலி யைப் பிரிந்துபோக, அவர்தாம் இடையிற்கண்ட பிரிவு நாட்களில் ஒரு வருக்கொருவர் காதன்மிக்கு எழுதிக்கொண்ட பொருட்செறிவு வாய்ந் வளவிய தெளிதமிழ்க் கடிதங்களாக விளங்குகின்றது. அதனுட்காதலன் கடிதங்கள் இருபத்து மூன்றும், காதலி கடிதங்கள் இருபத்திரண்டும் உள்ளன. தமிழகப்பொருளின் நூலுரையோடு அந்நூல் முழுதொத்து நிகழுகின்றதென்பதை அதன்கண் காதலன் பிரிந்து மீண்ட காலம் முறையே ஆனியுங் கார்த்திகையுமாமென்று குறிக்கப்பட்டிருப்பதும், அகப்பொருணூற் சான்றுகள் அங்கங்குக்காட்டப்பட்டிருப்பதும்,அதன் எல்லாப் பொருள்களும் அகப்பொருட் கருத்துக்களா யமைக்கப்பட் டிருப்பதும் இன்னபிறவும் நன்கு தெளிவுபடுத்தும்.

கடிதங்களெல்லாம் உயர்ந்த கருத்துக்கள் அமைந்து நாட்டைச் செம்மைப்படுத்தும் நலங்கெழுமி உள்ளன. காதலரிருவருள்ளும் ஆண் மகனின் விரைவு, மேன்மிதக்கும் நோக்கம் அறிவிக்க அறியும் அறிவு முதலியவைகளும், பெண்மகளின்பொறுமை ஆழ்ந்துஅமர்ந்த நோக்கம் இயற்கையறிவு முதலியவைகளுமாகிய இயற்கை வேற்றுமைகள் இனிது தெளிவாமாறு அக்காதலன் கடிதங்களும் காதலி கடிதங்களும் எழுதப் பட்டிருக்கின்றன.

உடலோடு உடல் சேர்ந்து அதன்கட் பெறும் இன்பமே . வின்பமென்றும், உளத்தோடு உளஞ்சேர்ந்து அதன்வழிப் பெ இன்பமே காதலின்பமென்றும் அவ்விரண்டின் வேற்றுமையையும் நூல் செவ்விதின் பகுத்துரைக்கின்றது. இன்னும், 'உளங்கலந்து . கலத்தலின்வழிப்பில்கும் உயர்ந்த இன்பத்தை நுகர்ந்து அதனோடமை மல் மேன்மேலும் அதனையே விரும்பும் உயர்ந்த நோக்கமுடைய கா மக்கள், தாம்கொண்ட நோக்கத்துக்குப் புறம்பான செல்வம் காம பம் முதலான பிறவெல்லாம் இல்லாத பொழுது, அவற்றால் எ தொடக்குறார்: தொடக்குற்றுத் தமது காதலன்புக்கு இழுக்கந்தேட என்னும் அவரியல்பினைத் தருவி யெடுத்து விளக்கியிருப்பது அறிந் மகிழக்கூடியதாகும்.

ஆகவே இந்நூல் தமிழ் மக்கள்பாற் பரவினால் மணமக்களைத்திரு நாட்டுக்கு நலந்தரும் என்பதற் கையமில்லை. இதன் விலை அணா ௧௨